
# தொலைந்துபோன ஆடுகள் 99

ஊழியத்திற்கு வரும் முன் அல்லது
ஊழியத்திற்கு வந்தபின் வாசிக்கவும்



மகிமையின்
செங்கோல்
MAGIMAYIN
SENGOL

S. சந்திரசேகரன்



S. CHANDRASEKARAN
*Founder & President*

கிறிஸ்துவுக்குள் அழியாத அன்புடனே அன்புகூறும் தேவ பிள்ளைகள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் இதய வாழ்த்துக்கள்! இந்தப் புத்தகத்தின் ஒவ்வொரு பகுதியும் ஒரு தொடர் செய்தியாக இருக்கும்.

ஊழியர்களுக்கும், ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வரும் விசுவாசிகளுக்கும் இந்தியா இயேசுவுக்கே என்று ஏங்குபவர்களுக்கும் இப்புத்தகத்தைத் தொகுத்துள்ளேன்.

என்னைப்பற்றி :

நான் இந்து மார்க்கத்தில் இருந்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவன். விசுவாசியாய், சீஷனாய், பகுதிநேர ஊழியனாய் படிப்படியாய் வளர்ந்து இப்போது கர்த்தருக்கென்று முழுநேரமும் ஊழியம் செய்கிறேன்.

எனது ஜீவியத்தில் 1983ம் ஆண்டு இரட்சிப்பின் அனுபவம் பெற்றேன். ஐந்து ஆண்டுகள் இந்தியாவில் சிறுவர் ஊழியங்கள், வாலிபர் ஊழியங்கள் செய்துக்கொண்டிருந்தேன். உலக வேலைக்காக "சவுதி அரேபியா" நாட்டுக்குச் செல்ல நேர்ந்தது.

ஏறக்குறைய 6 ஆண்டுகள் நான் அங்கு இருந்தபோது ... சபை ஊழியங்களில் பயிற்றுவிக்கப் பட்டேன். குறிப்பாக சவுதி தேசம் இஸ்லாம் மதத்தைத் தவிர வேறு எந்த மதத்தினையும் அனுமதிப்பது இல்லை மற்ற வழிபாடுகளையும் ஏற்றுக் கொள்வதும் இல்லை.

அந்தக் கொடிய வனாந்தரத்தில் தேவன் என்னைப்புடமிட்டார். ஆராதிக்க ஆலயம் இல்லை. ஆண்டவரை நோக்கி ஜெபித்தேன். இரகசியமாய் ஆராதிக்கும் சபைகளில் பங்குபெற்று பகுதி நேரமாக, முழு நேரமாக ஊழியத்தில் பயிற்றுவிக்கப் பட்டேன்.

முன்னுரையாக :

ஆண்டவரே! தொலைந்து போன ஓர் ஆட்டைத் தேடிஉமது மந்தையில் சேர்க்க வந்தீர். அதற்காக உமது ஜீவனையும் கொடுத்தீர்.



ஆனால் எங்கள் இந்தியாவில் இப்போது கிறிஸ்தவர்கள் நூற்றுக்கு மூன்று சதவீதம் என்கிறார்களே! அப்படியானால் மந்தையில் இருக்கும் ஆடுகள் நூற்றுக்கு மூன்றுதானே! பாரத தேசத்தில் தொலைந்து போன ஆடுகள் தொண்ணூற்று ஏழு இருக்கிறதே!

எப்படி இவர்களைத் தேடித்திரிவது? வழி என்ன? இவைகளை எப்படி கண்டுபிடிப்பது? இவைகளை எப்படி மந்தைக்குள் சேர்ப்பது? தேவனே! இரங்கமாட்டீரோ? எங்களுக்கு அந்த இரட்சிப்பின் வழியைச் சொல்லித்தர மாட்டீரோ? எழுப்புதலின் இரகசியத்தை எழுதித்தர மாட்டீரோ? என்று கதறிய கதறலின் விளைவுதான்,

இப்புத்தகம் இன்று உங்கள் கைகளில் இருக்கிறது. இதில் வரும் வார்த்தைகள் என் இருதயத்தின் அழுகுரல், இதில் குறைவுகள் இருந்தால் என்னைக் கிறிஸ்துவுக்குள் ஒரு குழந்தை என்று எண்ணிக்கொள்ளுங்கள் நிறைவு இருந்தால் அது தேவனின் கிருபை, அவரது மகிமை என்று முடிவு செய்யுங்கள்.

யாரையும் குற்றப்படுத்துவதோ, குறை சொல்லுவதோ எனது நோக்கமல்ல.

முடிவுரையாக : ஏற்கனவே இச்செய்திகள் மகிமையின் செங்கோல் என்னும் மாதப்பத்திரிக்கையில் வெளிவந்துள்ளது. பலர் இதுபோன்ற தலைப்புகளில் பேசவும், எழுதவும் தயங்கினது போல எனக்குள்ளும் தயக்கங்கள் எழுந்தது.

ஆனாலும் நேசர் இயேசுவின் மேல் வைத்த அந்த வைராக்கியம் என்னை எழுதத் தூண்டியது.

புத்தகம் முழுவதும் எண்ணங்களின் சிதறல்களாகவே உள்ளன. எடுத்துக்கொண்ட தலைப்பு கோர்வையாக விளக்கப் படவில்லை எனவே, நீங்கள் தனித்தனி கருத்துக்களாக தியானிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிரச்சனைகள் கூறப்பட்டுள்ளன ஆனால் தீர்வுகள் சொல்லப்படவில்லை எனெனில் இப்புத்தகத்தின் பக்கங்கள் கூடுதலாகிவிடும்.

இப்புத்தகம் கடந்த பத்து வருடங்களுக்கு முன்னமே எழுதப்பட்டது. இப்போது தான் பல தடைகளை தாண்டி வெளிவருகிறது. நான் கடந்து சென்ற பாதைகளில் ஏற்பட்ட அனுபவங்களிலிருந்து குறைந்த அளவே எழுதி உள்ளேன்.

இருள் சூழும் காலம் இனிவருகிறது. ஒருவரும் கிரியை செய்ய முடியாத இராக்காலம் நெருங்கிவிட்டது. எனவே என்னையும், இந்தச் செய்தியை வாசிக்கிற உங்களையும் தேவனின் கரத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபிக்கிறேன்.

சுகமாய் இருப்பீர்களாக ! ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாய் நாம் வாழப்போகும் காலங்களுக்காக கர்த்தரை துதிப்போம்.

கிஸ்துவுக்குள் அழியாத அன்புடனே அன்புகூறும்.

**S. சந்திரசேகரன்**

# நம் தேசத்தின் நிலைமை

இந்திய தேசம் முன் ஒரு காலத்தில் புகழ்மிக்க கலாச்சாரத்துடன் திகழ்ந்தது. வேதத்தில் எஸ்தர் எனும் புத்தகத்தில் முதல் அதிகாரம் முதல் வசனத்தில் இந்து தேசம் என்று இடம்பெற்றுள்ளது. ஆரிய-திராவிட நாகரீகம் இங்கு வளர்ந்ததையும், பற்பல தேசத்து மன்னர்களையும், சமுதாய பழக்க வழக்கங்களையும் பல்வேறுவகைபட்ட சமய வழிபாடுகளையும் பாரத தேசம் கண்டிருக்கிறது.

தேவனாகிய கர்த்தர் இந்த நாட்டை நேசித்ததால்தான் முதல் நூற்றாண்டு காலத்திலேயே தோமாவை ஊழியக்காரனாக அனுப்பி வைத்தார். தென்னிந்தியாவின் சென்னைப் பட்டிணத்தில் அவர் இரத்த சாட்சியாக மரித்தார். அவரது இரத்தத்தின் துளிகளிலேயே அந்நாட்களில் சுவிசேஷம் மக்களிடையே பரவி வந்ததாக வரலாறு கூறுகிறது.



உலகத்தில் ஏற்பட்ட சபைச் சரித்திரத்தின் மாறுதல்கள் பல பாதிப்புகளை ஏற்படுத்தியது. காலச் சக்கரத்தின் மாற்றத்தில் பல்வேறுவகைபட்ட பிரிவுகளை சேர்ந்த தேவ ஆலயங்கள் எங்கும் ஏற்பட்டது. பாரம்பரிய சபைகளில் இருந்து; பூரண சுவிசேஷ சபைகள் வரை வளர்ந்து கொண்டு வருகிறது.

பொதுவாக இக்காலகட்டத்தில் மக்களிடையே பாவத்தின் வேர்கள் ஆழமாய் புரையோடிப் போய் இருக்கிறதை பார்க்கிறோம். ஜனத்துக்கு விரோதமாய் ஜனம், உள்நாட்டு கலவரங்கள், பூமி அதிர்ச்சி, பூகம்பம்,

பஞ்சங்கள், எயிட்ஸ் உள்பட கொள்ளை நோய்கள் தலை விரித்தாடுகிறது. நீங்கள் சொல்லலாம், “சகோதரனே இவைகள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு முன்னர் நடக்க வேண்டிய அடையாளங்கள் தானே” என்று.

**உண்மை தான் ஒத்துக் கொள்கிறேன்.**



அக்கிரமங்களைக் கண்டு நீதிமானாகிய லோத்து தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்டான் என 2பேதுரு 2:8ல் வாசிக்கிறோமே! அதுபோல சில சமயம் நம் உள்ளமும் வாதிக்கப்படுகிறது.

வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் தெரியவில்லை. கையின் சித்திரங்களுக்கும்ரூ கர்த்தருக்கும் உள்ள வித்தியாசம் தெரியவில்லை. விக்கிரகங்களுக்கு வினை (பாவம்) தீர்க்கும் அதிகாரம் இல்லை எனவும் தெரியவில்லை.

மதங்களின் பெயரால் சுயலாபம் சம்பாதிக்கப்படுகிறது. கொள்கையின் பெயரால் கோஷ்டி சண்டைகள் கொடி கட்டிப் பறக்கிறது. சாத்தானின் தந்திரங்கள் ஒவ்வொரு செயலிலிருந்தும் செயல்படுகிறது. இதனால் ஜனங்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள்.

மனதை மயக்கி, மதியைக் கெடுத்து, ஜாதிகளின் பெயரால் வெறியுணர்வுகள் தூண்டப்படுகிறது. தீய வல்லமை ஒவ்வொரு மதத்திலும் ஒவ்வொரு கடவுளின் பெயரால் கொண்டு வரப்பட்டு மக்கள் மாயைக்கு அடிமை ஆகிறார்கள்.



ஒரு தேசத்தின் சாபத்துக்கு விக்கிரக ஆராதனை அடிப்படை காரணமாக அமைகிறது.

அடுத்து மாமிசத்தின் இச்சைகள். ஓ... கேட்கவே வேண்டாம். நாகரீகம் என்ற பெயரில் ஒழுங்கீனமான நடனங்கள், கண்ணின் காட்சிகள், ஆடை அலங்காரங்கள்.

இளம் உள்ளத்திலிருந்து வாலிப இதயம் வரை தொடர்ந்து அவர்களை கேட்டின் வழிக்கு அழைத்து செல்கிறது.

அநேகருடைய வாழ்வே பேஷன் ஷோவாக மாறி இருக்கிறது. நிழல் நிஜமாகாது - சினிமா உண்மையாகாது என்று ஒருவனுக்கு புரியுமுன் அவன் வாழ்வே சீர்குலைந்து விடுகிறது.

விபச்சாரம்-வேசித்தனம்-காம விகாரம் மறைமுகமாக இருந்த நிலைமாறி அவைகள் தான் சரியான வழி என்று சாதிக்கும் இளைஞரையும் பார்க்கிறோம்.

புண்பட்ட மனதை "புகை விட்டு" ஆற்ற முயன்றும் உடல் உறுப்புகள் தான் வெந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் சமாதானம் தேடி; நிம்மதியை அடைய "குடிமகன்களாக" மாறிக் கொண்டு இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் ஆண்டு ஒன்றிற்கு 8000 கோடி ரூபாய்க்கு டாஸ்மாக் மது கடைகள் மூலமாக மது விற்பனை நடைபெறுகிறது. அரசாங்கமே இதை ஏற்று நடத்துவது எவ்வளவு பெரிய கேலிகூத்து.

நேர் வழியில் சம்பாதிக்க வேண்டும் என்ற மனப்பக்குவம் மாறி..., எப்படியேனும் வாழ்ந்தால் போதும். சுகஜீவியம் செய்தால் போதும் என்று குறுக்கு வழியில் கொள்ளையடிக்கும் கும்பல்கள் பெருகிவிட்டன.

இத்தகைய மாமிசத்தின் இச்சைகளும், ஜீவனத்தின் பெருமைகளும், விபச்சாரங்களும் தேசத்தை சாபத்தின் பாதையில் அழைத்துச் சென்று கொண்டு இருக்கிறது.

இறுதியாக அரசியல் ...., அப்பப்பா அதைப் பற்றி பேச ஆரம்பித்தாலே அண்ட சாராசரமும் ஆடி அடங்கும். அடிமட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை லஞ்சம் தான் அதன் அஸ்திபாரம். அது இல்லாவிட்டால் துண்டு பேப்பர் கூட அடுத்த மேசைக்கு போகாது.

லஞ்சத்திற்கு வேதாகமம் சொல்லும் இணையான பெயர் பரிதானம். அது அநேகரின் கண்களை குருடாக்கி விட்டது. இக்கொடிய செயல் தேசத்தை சாபத்தின் உச்சக் கட்டத்திற்கே கொண்டு செல்கிறது.

மனிதர்களையே தெய்வம் என்று போற்றுவதும், அவர்களையே மாதிரியாக கொண்டு பின்பற்றுவது; இப்போது சாதாரண நிகழ்ச்சிகளாகி விட்டது. அவர்களிடம் குறிகேட்க செல்வதும், அவர்களது கோட்பாடுகளில் கண்மூடித்தனமாய் சிக்கித் தவிப்பதும் நாம் பார்க்கும் அன்றாட சம்பவங்களாகி விட்டன.

எல்லாவற்றுக்கும் மேல் எம்மதமும் சம்மதம். இறைவன் ஒருவரே என்று சொல்லித் திரியும்படி ஜனங்களின் மனக்கண்களை குருடாக்கி இருக்கிறான் பிசாசு.

இந்தியாவின் வட மாநிலங்களில் மூடப்பழக்கங்களை சாஸ்திர சம்பிரதாயம் என்ற போர்வையில் வைத்து, மறைத்து மக்களை மயக்குகிறார்கள்.



தென் மாநிலங்களில் பாரம்பரிய கட்டுப்பாடுகளும், மதவெறியும் ஜாதிச் சண்டைகளும் புரையோடிப்போய் இருக்கிறது.

அதற்காக நல்லவர்களே இல்லையா என்று கேட்கிறீர்களா? நல்லவர்கள் முன்பு நூற்றுக்கு ஐம்பது பேர் இருந்த நிலைமாறி நூற்றுக்கு ஒருவரே என்று ஆகிவிட்டது.

**கிறிஸ்தவத்தைப் பற்றிய உலக மக்களின் மனதில் பதிந்த தவறான கருத்துக்களும் - எண்ணங்களும்**

- முதலாவது கிறிஸ்தவர்கள் மதம் மாற்றுகிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறார்கள். ஏன் இப்படி நினைக்கிறார்கள்?
- பாரம்பரிய சபையினரையே சமுதாயத்தினர் கிறிஸ்தவர்களாக ஏற்றுக் கொள்கிறார்கள். காரணம் - அவர்களுக்கு வானுயர்ந்த பெரிய கோபுரங்கள், அதற்கேற்ற அமைப்பு, வித்தியாசம் இல்லாத கலாச்சாரம், பொட்டும், பூவும் வைப்பார்கள். தேர் திருவிழாவும் செய்வார்கள். பெயர்களும் கிறிஸ்தவ பெயர்களாக இருக்கும்.
- ஆனால் ஆவிக்குரிய கிறிஸ்தவரோ வைராக்கியமாய் தியாக மனப்பான்மை உடன் ஆழமான பிரதிஷ்டையுடன் கிறிஸ்துவை இரட்சகராய் அறிவித்தனர்.
- இதில் பிரச்சனை என்னவென்றால் சமுதாயத்தில் உள்ள புறமதத்தினரிடையே ஆவிக்குரிய சபையின் சத்தியங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டன. மாறாக ஓ.. இந்த கிறிஸ்தவர்கள் ஏன் இப்படிக் கத்துகிறார்கள்? கூச்சல் போடுகிறார்கள் என சத்தத்தை மட்டுமே குறையாக கூற ஆரம்பித்தனர். அதற்கு பிறகு
- நகைகளை கழற்று, வெள்ளை துணி உடுத்து, மாத்திரை எடுக்காதே, மனைவியை சகோதரியாக பாவித்து நடத்து என அவர்கள் கூறுகிறார்கள் என்பதாக உலகம் தவறாக புரிந்து கொண்டது.
- இருதயத்தை திறந்து சத்தியத்தையே சொன்னாலும் இரட்சிக்கப்படாத ஜனங்கள் முதலில் சத்தியம் சொல்லுகிறவர் எப்படி இருக்கிறார் என்று உற்றுப் பார்ப்பார்கள். அப்போது அவர்களது நடை, உடை, பேச்சு செயல்களை அளந்து பார்க்கிறார்கள்.

⊙ மனமாற்றத்தைப் பற்றி பேசி மனம் திரும்புதலை நாம் அறிவிக்கின்ற போது உண்மையான சத்தியம் பின்னுக்கு தள்ளப்பட்டு இது கலாச்சார மாற்றம் என்ற நிலைக்கு அவர்கள் வந்து விடுகிறார்கள். ஒருவருடைய கலாச்சாரம் மாறுகிறபோது இது தான் மதமாற்றம் என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர்.

⊙ நமக்கு முந்தின தலைமுறையில் அதாவது பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர்... **பாரம்பரிய சபையினர்** இயேசுவை ஆண்டவராக அறிவிப்பதற்காக சமுதாய சேவையில் ஈடுப்பட்டார்கள். பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் என்று கட்டி தேவஅன்பை வெளிப்படுத்தினார்கள்.

⊙ இவர்கள் தானுண்டு தன் கோயில் உண்டு என இருந்தனர். முடிந்த அளவுக்கு இயன்றதை ஊழியமாக செய்தனர். ஆகவே அவர்களைப் பற்றி ஓரளவு சமுதாயம் ஏற்றுக் கொள்கிறது. மட்டுமல்ல அவர்களது அமைப்பு ரீதியான ஒழுங்கு முறைகள் அனைவரையும் கவர்ந்துள்ளது.

⊙ மிதவாதிகள், நடுநிலைவாதிகள், தீவிரவாதிகள் என எல்லாவற்றிலும் மூன்று பிரிவு இருக்கும்.

⊙ அரசியலில் யார் ஆண்டால் நமக்கென்ன என்று இருப்பவர் மிதவாதிகள். அரசியலில் ஈடுபட வேண்டாம். ஆனால் அதைப் பற்றி தெரிந்திருக்க வேண்டுமே என்பவர்கள் நடுநிலைவாதிகள், தலைவனுக்காக கொடிபிடித்து, அடி வாங்கி, கடைசியில் எண்ணெய் ஊற்றி எரித்துக் கொள்கிறவன் தீவிரவாதி...

◊ அதுபோலவே எல்லாம் ஒரே கடவுள்தான் எல்லா மார்க்கங்களும் சரிதான். எம்மதமும் சம்மதம் என இருப்பவர்கள் மிதவாதிகள்.





◊ நம் கர்த்தர் பெரியவர் என எல்லாவற்றிலும் நடுநிலை வகிப்பவர்கள் ... பொட்டு வைக்க கூடாது, ஆனால் பூ வைப்பதில் என்ன தவறு என்பவர் நடுநிலைவாதிகள்.

◊ ஒரே ஒரு வாழ்வு அது இயேசுவுக்கே! கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் என்று முழங்கும் ஆவிக்குரியவர்கள் தீவிரவாதிகள்.

◊ பொதுமக்கள் தீவிரவாதிகள் செய்யும் அட்டூழியங்களைத் தான் கணக்கில் வைக்கிறார்களே தவிர அவர்களது கொள்கைகளை அலசி ஆராய்வதில்லை.

◊ அதுபோல கிறிஸ்தவத்தில் தீவிரமாக செயல்படுபவர்களின் பிரச்சாரத்திற்கும் (பேச்சுக்கும்) வாழ்க்கையில் உள்ள ; நடத்தைகளுக்கும் உள்ள இடைவெளியை உலகம் பெரிதாக பார்க்கிறது.

◊ வாலிபர்களின் கூட்டத்தில் தங்களது அனுபவங்களை ஒரு பேப்பரில் எழுதிக் கொடுக்கச் சொன்னார் ஒரு பிரசங்கியார். அப்போது இந்து மத வாலிபன் இப்படியாக எழுதினான்.

◊ நான் கிறிஸ்துவுக்குள் வந்துவிட்டேன். ஆனால் நான்



**கிறிஸ்தவர்களுக்குள்** வர பிரியப்படவில்லை.

◊ இந்தியாவின் தேச பிதா மகாத்மா காந்தியடிகள் இயேசுவின் மலைப் பிரசங்கத்தில் மயங்கிவிட்டார். சத்தியத்தை ஏற்றுக் கொண்டார். ஆனால் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாகவே இருந்திருந்தால் இந்தியா என்றோ இரட்சிக்கப் பட்டிருக்கும் என்ற ஏக்கத்தை வெளிப்படுத்தி பின்னுக்கு சென்று விட்டார்.

◊ **கிறிஸ்துவை பார்க்காமல் கிறஸ்தவர்களை பார்த்ததால் அவரும் இடறல் அடைந்தார்.**

◊ இத்தனை காலமாக இவ்வளவு ஸ்தாபனங்கள் ஊழியம் செய்தும் உலக மக்களின் உள்ளத்தில் நம் கிறிஸ்தவத்தை கலாச்சார மாற்றமாகத்தானே நினைக்கிறார்களே தவிர சத்தியத்தை மெய்யான சத்தியமாக ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

◆ அங்கே போனால் மதத்தை மாற்றி விடுவார்கள். எனவே கிட்டே போகாதே என்று அலறுகிறார்கள். நகையை கழற்றிவிடுவார்கள் என்பதே துர்செய்தி தான். இப்போது எந்த ஆவிக்குரிய சபையும் இதை பெரிய விஷயமாக எடுத்துக் கொள்வது இல்லை.

◆ தன்னைத்தானே துன்பப்படுத்திக் கொண்டு இதில் இன்பம் காணும் மனோநிலை; ஒருவித வியாதி. இதற்கு மருத்துவ துறையில் மொலோகிஸ்டு என்பார்கள் என புதுவிளக்கம் தந்துள்ளார் டாக்டர் ஒருவர்.

◆ நகை போடாதது கிறிஸ்துவுக்காக செய்யும் தியாகம் என்று சொல்லாமல் அதை **சுயவெறுப்பின் அடிப்படையில்** செய்திருந்தால், கிறிஸ்தவர்களும் குழம்பி, இதனால் புறமதத்தவர்களும் குழம்பி நம்மை நகை கழற்றுகிறவர்கள் என ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லையே!

◆ காலகாலமாக நகை போடாதவர்களும், நகை போடுபவர்களும் ஆளுக்கு பாதி பாதி பைபிள் வசனங்களை பிடித்துக் கொண்டு செய்யும் வாக்குவாதங்களால் இன்றுவரை இறுதியான தீர்வு ஏற்படவே இல்லை. இந்தப் பிரச்சனை இந்தியாவில் உள்ள ஆவிக்குரிய வட்டாரத்தில் மட்டுமே உள்ளது. இங்கு தான் நகை என்பது கலாச்சாரத்தின் சின்னம்.

✖ வெளிநாட்டில் பொட்டும், பூவும், நகையும் முக்கியம் இல்லாத விஷயங்கள். பெருமையைக் கழற்றுவோம்; தாழ்மையைத் தரித்துக் கொள்வோம். கிறிஸ்துவுக்காக கிரயம் கொடுப்போம் என்கிறதாக அவர்கள் வாழ்வு இருப்பதால் அவர்களால் உலகம் முழுவதும் ஊழியம் செய்து தேவ ராஜ்ஜியத்தை கட்டி எழுப்ப முடிகிறது.

✖ நம்மவர் வெளிநாட்டு ஊழியத்திற்கு போகும்போது இங்குள்ளஇவர்கள் சார்பில் காணிக்கையை எடுத்துப் போய் ஏழை நாடுகளில் ஊழியம் செய்ததாக சரித்திரம் உண்டா என சிந்தித்துப் பாருங்களேன்.

✖ கனடாவில் சகோதரன், அமெரிக்காவில் சகோதரன், ஜெர்மனியில் சகோதரன் என இவர்கள் பத்திரிகையில் வரும் விளம்பரத்தைப் பார்த்தீர்களே! என்றாவது... சோமாலியாவில் சகோதரன், எத்தியோப்பாவில் சகோதரன் என ஏழை நாடுகளுக்குப் போய் சொந்தப் பணத்தை செலவழித்து ஊழியம் செய்திருக்கிறார்களா?



✖ ஒவ்வொரு கிறிஸ்தவரின் மகனுக்கோ, மகளுக்கோ திருமணம் நடக்கும்போது இப்படிப்பட்ட ஆடம்பரமான நகை, உடை, அலங்காரம் போன்றவற்றால் அவர்களது பிள்ளைகளின் குடும்ப வாழ்வும் பாதிக்கப்படுகிறது.

✖ கிறிஸ்தவம் மேலைநாட்டு மதம், வெளிநாட்டு கலாச்சாரத்தின் இறக்குமதியே மதமாற்றம்.

✖ மேலைநாட்டு பணம், பால் பவுடர், பகட்டுக்காக இவர்கள் மாறுகிறார்கள்.

✖ பூவும், பொட்டும், நகையும் மாறவேண்டும். பந்தபாச உறவுகள் வெட்ட வேண்டும். மாட்டுக்கறி சாப்பிட வேண்டும், பாவத்தை விடவேண்டும் என்கிறார்களே இது எப்படி ஆகும்? என வாக்குவாதம் செய்கிறார்கள்.

✖ எதற்கும் நீங்கள் காலனிகள் பக்கம் போய் பேசுங்கள். இது தாழ்த்தப்பட்டவர்களின் மதம் எனவும் எதிர்க்கிறார்கள். தரித்திரருக்குதான் சுவிசேஷம் சொல்லவேண்டும் நாங்கள் உயர்குடி மக்கள் எனவும் பிடிவாதம் செய்கிறார்கள்.

✖ இந்த ஜனங்களுக்குள் இப்படிபட்ட விஷ விதைகள் விழுந்தது எப்படி? ஏன்? என ஆராய்ந்து பார்த்து அதை நீக்க ஒவ்வொருவரும் முயற்சித்தால் . . . நிச்சயம் நற்செய்தி பரவும், துர் செய்திகள் அகற்றப்படும்.

✖ கொசுவை வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிற கிறிஸ்தவர்களால் எத்தனை எத்தனை இன்னல்களை நாள்தோறும் சந்திக்கிறோம்.

✖ நமது வேத புத்தகத்தில் எவ்வளவோ சிறந்த ஆவிக்குரிய கருத்துக்கள் உள்ளது.

✖ பாவ மன்னிப்பு, மனம் திரும்புதல் இரட்சிப்பு எனத் தொடங்கின நித்தியம் வரை எவ்வளவோ சத்தியங்கள்.

✖ இதையெல்லாம் பின்னுக்கு தள்ளி இன்றைய உலக மக்கள் மனதில் கிறிஸ்தவத்தின் கலாச்சார மாற்றங்களே பதிந்துள்ளது. அங்கே மதமாற்றம் செய்து விடுவார்கள் என்றே நினைக்கிறார்கள். இத்தனை காலம் ஊழியம் செய்தும் இவர்கள் மனதில் இப்படிப்பட்ட தவறான களைகளே வளர்ந்துள்ளது.

✖ இதை அழிக்க யாரால் முடியும்? எப்படி இந்த தவறை சரி செய்யப் போகிறோம்? என்பதைப் பொறுத்துத் தான் தேவ ராஜ்ஜியத்தின் வளர்ச்சியும், ஆசீர்வாதமும் அடங்கி உள்ளது.

தீர்க்க தரிசிகள்

## தீர்க்க தரிசனம் இன்றைய நிலை

▣ தீர்க்கதரிசனம் - இந்த வார்த்தைக்கு மயங்காதவர்கள் இன்றைய கிறிஸ்தவ உலகில் குறைவு. அதற்கு காரணம் எதிர்காலத்தை பற்றிய முடிவு எடுக்க இயலாத நேரத்தில் கர்த்தரின் சத்தம் கேட்டால், பரலோக சித்தம் செய்யலாமே என்ற ஏக்கம் தான்.

▣ அடுத்து குழப்பமான சமயத்தில் திட்டமான தேவ வார்த்தை ஒருவரை திசைமாறி போகாதிருக்கச் செய்யும். மட்டுமல்ல நம் பாவத்தினால் நம்மிடம் பேசாது இருக்கும் தேவன். மற்றவர் மூலமாக நம்மிடம் பேச மாட்டாரா என்கிற எண்ணமும் உண்டு.

I சாமுவேல் 28:15

▣ ஆவிக்குரிய வாழ்வில் குழந்தைகளாய், வாலிபராய், பிதாக்களாய் வளர்ச்சி அடைந்தாலும் எந்நிலையிலும் தீர்க்கதரிசனங்கள் அவசியம்தான். ஏனெனில் தீர்க்கதரிசனம் இல்லாத இடங்களில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள். - நீதிமொழிகள் 29:18

▣ கடந்த ஐந்து வருடங்களாக புத்தாண்டு பிறக்கும் கால கட்டத்தில் திடிரென சுவிசேஷகர்கள் தங்கள் முறைமைகளை மாற்றி தீர்க்கதரிசனம் சொல்லத் தொடங்கினார்கள். வழக்கமாக வாக்குத்தத்த செய்தி என ஆசீர்வாதமான வார்த்தையை மட்டும் சொல்லி அனுப்பும் பழக்கத்துடன் இப்போதெல்லாம் தீர்க்கதரிசனமும் உரைக்கிறார்கள்.

▣ இவர்களால் விசுவாசிகள் மாறினார்களா? விசுவாசிகளால் ஊழியக்காரர்கள் மாறினார்களா? ஏன்? இப்போது மட்டும் தீர்க்கதரிசனத்துக்கு புதுப் பொலிவு கூடியது?



❖ தங்களது சொந்த முழங்காலில் நின்று ஜெபிக்க விருப்பம் இல்லாதவர்களும் வசனத்தில் பழக்குவிக்கப்படாத விசுவாசிகளும், தங்கள் அழைப்பில் உறுதியாய் நில்லாத ஊழியக்காரர்களுமே இந்த சீர்கேட்டுக்கு காரணம்.

❖ புறஜாதிகளின் மார்க்கத்தில் குறி சொல்லுவதும், குறி கேட்பதும் இவர்கள் செய்யும் தீர்க்கதரிசன ஊழியத்திற்கும் உள்ள வித்தியாசம் தெரியாமல் ஏமாந்து போனவர்களும் உண்டு.

❖ ஒளியின் தூதனுக்கும், போலி தீர்க்கதரிசனத்துக்கும், கள்ளத் தீர்க்கதரிசிக்கும் - சாதூர்யமும் வெகு ஜனங்களை கவரும் கவர்ச்சியும் அதிகமாக இருக்கும். தீமை செய்ய திரளான பேர்களை பின்பற்றாதே என்பதும் வேதம் தரும் எச்சரிப்புதானே?

❖ எல்லோரும் தீர்க்கதரிசனம் கேட்கப் போகிறார்கள். ஆகவே நானும் போகிறேன். எல்லோரும் தீர்க்கதரிசனம் சொல்கிறார்கள். நாமும் சொல்லாவிட்டால் நம்மை யாரும் மதிக்க மாட்டார்கள். ஆகவே நானும் சொல்கிறேன் என ஊழியர் ஒருவர் புலம்பியதை கேட்டேன்.

❖ பின்மாற்றத்தில் விழுந்த சவுல் ராஜாவும், தீர்க்கதரிசனம் உரைத்ததாக (1சாமுவேல் 19:24) வேதத்தில் உண்டே; தவிர, வரங்களை தங்கள் இஷ்டத்திற்கு யாரும் செயல்படுத்த இயலாது.

❖ வேறே தேவர்களின் (பிசாசுகளின்) நாமத்திலேயும் சொல்லுகிற தீர்க்கதரிசிகள் உண்டு. செத்துப் போனவர்களின் கல்லறைக்குச் சென்று, செத்துப் போன ஆவியை மேலே ஏற்றி கொண்டு வந்து, சரியாய் தீர்க்கதரிசனம் என்ற பெயரில் குறி சொல்லுகிறவர்களும் உண்டு. ஆகவே கடைசி காலம் விழிப்பாய் இருங்கள்.

❖ சோனியா காந்தி தான் இந்தியாவின் பிரதமராக வருவார் என நினைத்து அரசியல் தீர்க்கதரிசனம் சொன்னவர்கள் அது நடக்காதபோது அதற்கு வேறு விளக்கம் கொடுத்து சூடுபட்டார்கள்.

❖ ஆனாலும் எவரும் திருந்தவும் இல்லை. திருத்திக் கொள்ளவும் இல்லை. தேவனே இதில் தலையிட்டால்தான் தீர்வு வரும்.

◆ எத்தனை பினகாஸ் கிறிஸ்தவ சமுதாயத்தில் தோன்றி னாலும் இப்போது உள்ள கால நிலைகளில் ஜனங்களுக்கு அன்பும், ஆறுதலும், ஆசீர்வாதமும் தான் வேண்டும். எச்சரிப்பு, விழிப்புணர்வு, தேவை இல்லை என்பது போல் உணர்கிறார்கள். ஆகவே கோதுமை மணிகளும் நிலத்தில் விழுந்து சாக வேண்டியுள்ளது. - யோவான் 12:24;

◆ ஆபிரகாம் தான் வேத புத்தகத்தில் முதன் முதலில் தீர்க்கதரிசி என அழைக்கப்-பட்டார். அவரிலிருந்து வெளிப்படுத்தலில் வாசிக்கிற இரண்டு தீர்க்கதரிசிகள் வரை அனைவரும் கர்த்தருடைய ஊழியக்காரர்களே.. ஆதியாகமம் 18:18

◆ மீரியாம், தெபொராள், உல்தாள், அன்னாள் ஆகியோரும் பெண் தீர்க்கதரிசிகள் என்று வேதத்தில் அறிகிறோம். எல்லோரும் கர்த்தருக்கும் வாயாக இருந்தவர்களே.

◆ இந்நாட்களில் வசனத்தின் மேல், கர்த்தருடைய வார்த்தையின்மேல் தாகம் உள்ளவர்களை பார்ப்பது அரிதாக உள்ளது. யார் எந்த தீர்க்கதரிசனம் சொன்னாலும் வேத வசனத்திற்கு ஒத்து இருக்கிறதா? என ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

◆ வேதத்தில் உள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டி உள்ளது (2பேதுரு 2:20)

◆ அதிக உறுதியான தீர்க்க தரிசன வசனமும் நமக்கு உண்டு. 'தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும், அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள். எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டி ருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப் பட்டிருக்கிறானே.' (2பேதுரு 2:19)

◆ வேத வசனத்திற்கு ஒத்து வரும் தீர்க்கதரிசனமே என்றைக்கும் தேவைப்படுகிறது.





## சுவிசே கர்கள்

➤ நீயோ எல்லாவற்றிலேயும் மனத்தெளிவுள்ளவனாயிரு. தீங்கனுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய்; உன் ஊழியத்தை நிறைவேற்று என 2தீமோத்தேயு 4:5 வசனம் கூறுகிறது.

➤ பக்தனாகிய பவுல் இளம் ஊழியனாகிய தீமோத்தேயுக்கு, சுவிசேஷகனுடைய வேலையைச் செய் என்று அன்பாய் கட்டளை - யிடுகிறார்.

சுவிசேஷகனுடைய வேலையைச் செய்வது ஒவ்வொரு உத்தம விசுவாசியின் கடமையாகும். - I கொரிந்தியர் 9:16

இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றவுடன் அடுத்தவர்களுக்கும் இயேசுவைப் பற்றி அறிவிக்காமல் இருக்கவே முடியாது. சொறி பிடித்தவன் கையும், சுவிசேஷம் சொன்னவர் வாயும் சும்மாவே இருக்காது என்று சொல்லக் கேட்டேன். - I கொரிந்தியர் 2:16

➤ சுவிசேஷ வேலை என்பது ஐந்து விதமான ஊழியத்தில் (அப்போஸ்தலர், மேய்ப்பர், போதகர், சுவிசேஷகர், தீர்க்கதரிசி) அதுவும் ஒரு பிரிவு. - எபேசியர் 4:13 இந்த ஊழியம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் இறுதி கட்டளையாக சொல்லப்-பட்டுள்ளது. - மத்தேயு 28:19, 20

➤ ஆகவே நற்செய்தி அறிவிப்பவர்களுக்கு ஆலோசனைகளை தொகுத்து தருகிறேன். தற்போது வளர்ந்து வரும் சுவிசேஷகர்களுக்கும் பிரயோஜனமாக அமையும்.

➤ கூட்டங்களுக்கான தேதியை ஒத்துக் கொள்ளும் முன்னர் தேவனிடம் ஆலோசனை கேளுங்கள். உங்களுடைய ஆவியிலும் ஓர் நடத்துதல் இருந்தால் தேதியை முடிவு செய்யுங்கள். - I சாமுவேல் 30:8

➤ எக்காரணத்தை முன்னிட்டும் பிறகு கூட்டத்தை கேன்சல் (நிறுத்துவது) பண்ணவே கூடாது. வியாதி, மரணம், மழை, இழப்புகள் எதுவாய் இருந்தாலும் கொடுத்த வாக்குக்கு உண்மையாக இருக்க முயற்சியுங்கள் - அப்போஸ்தலர் 29:23, 24



➤ அந்த தேதியில் வெளிநாட்டு ஊழியம் இருக்கிறது என்று பொய்யோ. அடுத்த வருடம் அக்டோபர் வரை ஏற்கனவே புக்கிங் ஆகிவிட்டது என்று மிகைப்படுத்திச் சொன்னால் அப்படிப்பட்ட உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானது. என்று அறிந்து கொள்ளுங்கள். பிறகு ஊழியத்தை தேடி நீங்கள் அலைய வேண்டிய அபாயம் வரும். - நீதிமொழிகள் 12 : 22

➤ கூட்டத்திற்கு ஒத்துக் கொள்ளும் முன்னர் உங்கள் எதிர்பார்ப்புகளை வெட்கப்படாமல் சொல்லி விடுங்கள். என்ன சாப்பாடு வேண்டும்? எங்கு தங்க வேண்டும்? எப்படி பிரயாணம்? எவ்வளவு காணிக்கை? எந்த தலைப்பில் பிரசங்கம்? என மனம் விட்டு முன்பே முடிவு செய்தால் கூட்டம் ஒழுங்கு செய்பவர்களுக்கு பதட்டம் இருக்காது. செல்லும் செலவை கூட்டத்தை ஒழுங்கு செய்பவர் கணக்கு பார்க்க வசதியாக இருக்கும். அங்கு வந்த பின்னர் உங்கள் ஆடம்பரமான செயல்கள் ஆட்களை வெறுப்புக்குள் நடத்தி விடும்.

➤ மாதத்தின் எல்லா நாட்களும் ஊழிய தேதியை கொடுக்காதீர்கள். அநேக சுவிசேஷகர்களுடைய ஊழிய விபரத்தை அவர்களது மாதப் பத்திரிக்கையில் பார்த்தால் தலை சுற்றும். மயக்கமே வரும்.

➤ மாதம் 30 நாட்களும் நீங்கள் ஊழியத்தில் சுற்றினால், உங்கள் தனி ஜெபம் / உபவாசம் / ஆவிக்குரிய ஆராதனை நேரம், குடும்பத்தோடு செலவிட நேரம் கிடைக்காதே. ஒரு வியாபாரி வியாபாரத்துக்காக ஓய்வு இல்லாமல் சுற்றலாம். ஆனால் உங்கள் நிலை அப்படி அல்ல. பிறகு ஊழியம் வியாபாரம் ஆகிவிடும்

➤ அதிக ஜெபம், அதிக ஆயத்தம், அதிகமான ஆத்தும பாரத்துடன் கொஞ்சமான ஊழியம் செய்தாலும் ஆசீர்வாதமாக அமையும். வேகமாக ஓடுவதை விட்டு நிதானமாக ஓடுவது எல்லையைத் தொட உதவியாக இருக்கும். ஜோராக ஓடுவதைவிட சீராக ஓடுவது நல்லது.

➤ சபைகளில் பிரசங்கிக்க அழைத்தால் கொடுத்த நேரம் 45 நிமிடமோ, 1 மணி நேரமோ, 1.30 மணி நேரமோ அதற்குள் பேசி ஜனங்களை தேவ பிரசன்னத்திற்குள் நடத்த வேண்டும். அதிக நேரம் எடுத்து காலதாமதம் செய்தால் அந்த சபை மேய்ப்பருக்கு அதிக கஷ்டம்.



➤ ஆசீர்வதிக்கும் ஆண்டவர் இயேசுவுக்கு ஐந்து நிமிடம் போதுமே! ஆகவே எந்த சுவிசேஷகனும் கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் முடிக்க பழகிக் கொள்வது நல்லது.

➤ பேச ஆரம்பித்தவுடன் உங்கள் சொந்த கதை, சோகக் கதை, பெருமை, வெளிநாட்டு ஊழிய கதைகள் வேண்டவே வேண்டாம். ஒருவர் .. அரை மணி நேர பிரசங்கத்தில் ஐந்து கண்டங்களையும் சுற்றி பேசிவிட்டார். கேட்பவருக்கு அமெரிக்காவும், ஆப்பிரிக்காவும், ஐரோப்பாவும் தெரிவிக்க முயல வேண்டாம். இந்தியாவும், பரலோகமும் தெரிந்தால் போதும். சொந்த நாடும், போய் சேரப் போகிற நாடும் தெரிந்தால் **"எழுப்புதல் தானே வரும்"**.

➤ எக்காரணத்தை முன்னிட்டும் சபையின் ஊழியரையோ, மேய்ப்பர்களையோ குறைத்து பேசவே கூடாது.

➤ முட்டையிடும் கோழிகளுக்குத்தான் வலி தெரியும். அடுத்தவர் பிரசங்க பீடத்தில் நீங்கள் நிற்கிறீர்கள் என்ற உணர்வு இருக்க வேண்டும்.

➤ உங்கள் சாட்சி சொல்லும் போது பாவத்தைக் குறித்து மிகைப்படுத்தி பேசிவிட்டு அதற்கே முக்கால் மணி நேரம் இரட்சிப்பை பற்றி பேச நேரமில்லை. எனவே சுருக்குகிறேன் என்று முக்கியமான விஷயங்களை விட்டுவிடுவது வேதனை தரும் விஷயம்.

✲ பொது இடங்களில் பேசும் சுவிசேஷகர் பிதாவின் ஆவியானவர் துணையோடு பேச வேண்டும். அப்படி இல்லாமல் அந்த இடத்தில் மற்ற ஊழியக்காரர்களைத் திட்டி பேசினால் யானை தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டது போல் ஆகும். மற்ற பிறமதத்தினரையும் வம்புக்கு இழுக்கக் கூடாது. பேச்சில் பெருமை தெரியக் கூடாது. ஆத்தும பாரம் தான் வெளிப்பட வேண்டும். கலாத்தியர் 2 : 20

➤ வசனத் தெளிவு இல்லாமல் பேசக் கூடாது. உபதேசக் குழப்பங்களை உண்டாக்கவும் கூடாது. அப்போஸ்தலர் 8 : 16 - 24



✲ டாக்டர், ரெவரண்ட், படிப்பு, பதவி, வரம் பெற்ற ஊழியன், என்று வரட்டு கௌரவம் வேண்டவே வேண்டாம் உண்மையாகவே ஊழியம் செய்தால் கனம் தானாகவே தேடி வரும். தலைக்கனம் வந்தால் தனக்குத்தானே ஆபத்து.

✲ கூட்டத்தார் மெச்சிக் கொள்ள வேண்டும் என்பதற்காக போலித் தீர்க்க தரிசனம்; பெயர் சொல்லி அழைக்கும் ஊழியமும் உங்களை கேலி பொருளாக மாற்றிவிடும் புலிகளைப் பார்த்து பூனைகளும் சூடு போட்டுக் கொள்ளுகிறது. உங்களுக்குள் இருக்கும் தேவ வல்லமையை வேறு வழிகளில் வெளிப்படுத்தி காட்டினால் தேவ நாமம் மகிமைப்படும்.

**ஆதியாகமம் 34 - 30**

✲ ஒருவர் பரலோகத்திற்கு செல்லாவிட்டாலும் பரவா யில்லை. பக்கத்தில் இருக்கும் சிங்கப்பூருக்காவது போய் வரவேண்டும் என்று புலம்பினார்.

➤ எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. இனி இவர் ஊழியம் இந்தியா வில் எடுபடாது. வெளி நாட்டில் தான் செய்தாக வேண்டுமா? என்ற கவலை என்னுள் எழுந்தது. வெளி நாடு சென்றும் இவர்கள் ஊழியர்களின் வாசனையை கெடுத்து விட்டு, வந்து விட்டார்கள். இதனால் வளர்ந்து வரும் இளம் ஊழியர்களுக்கு பெரிய தடை.

✲ சாதாரண நிலையில் இருக்கும் சுவிசேஷகனுக்கும்; கிராமத்தில் ஊழியம் செய்வது என்றால் கசக்கிறது. ஆனால் கிராமமே எங்கள் தரிசனம் என்று பட்டிணங்களில் இருந்துகொண்டு முழங்குகிறார்கள். இது கசப்பான உண்மை.

✲ எவ்வளவு வால் போஸ்டர்கள், கைபிரதி என்று தன்னை விளம்பரப்படுத்திக் கொண்டு தன்னையே ஹீரோவாக உயர்த்தினால் திடீரென சீரோவாக (சைபராக) நேரிடும். **தனிமனித வழிபாடு தேவனுக்கு செய்யும் வழிபாட்டை தடுக்கிறது.**

✲ ஞாயிற்றுக்கிழமைகளில் சுவிசேஷகர்கள் தான் அங்கமாக உள்ள சபையில் ஆராதனை செய்வது அவரது ஆத்துமாவுக்கு நல்லது. இதில் என்ன பிரச்சனை என்றால்... அநேகர் ஒரு சபையில் அங்கமாய் இருப்பதும் இல்லை, சபைக்குள் சுவிசேஷ ஊழியம் செய்வதும் இல்லை, தனிப்பட்ட அவருடைய சொந்த ஆத்துமாவுக்காக எந்த ஒரு ஆராதனையிலும் பங்கு பெறுவதும் இல்லை.



✲ இது சுவிசேஷகர்களின் பின் மாற்றத்திற்கு ஒரு காரணமாய் அமைகிறது. அநேக ஆத்துமாவை ஆதாயப்படுத்தாமல் போனாலும் பரவாயில்லை. என்னுடைய ஆத்துமாவை நான் காப்பற்றிக் கொள்ள வேண்டியது மிக மிக முக்கியம் என்று ஒவ்வொரு ஊழியரும் தீர்மானம் செய்ய வேண்டும்.

✲ உங்கள் சொந்த புத்தகம் விற்பது; ஆடியோ கேசட் விற்பது போன்ற விளம்பரங்களும் இடையே சொல்லக் கூடாது. வெளியில் வைத்தால் வேண்டியவர்கள் வாங்கிச் செல்வார்கள். பிதாவின் வீட்டை வியாபார நோக்கோடு பயன்படுத்தக் கூடாது.

✲ முக்கியமாக கூட்டம் முடிந்தவுடன்; சுவிசேஷகர்கள் விசுவாசிகளிடம் முகவரி வாங்கும் வேலை வேண்டவே வேண்டாம். முகவரியை கொடுத்து உங்கள் தனி ஜெப கூட்டத்திற்கு அழைக்கவும் வேண்டாம். ஜெபக் கூட்டம் சபையில் இருக்கும் விசுவாசிக்கு அல்ல.

✲ இரட்சிக்கப்படாத புது ஆத்துமாக்களை ஜெப கூட்டங்களுக்கு அழைத்துச் சென்று இயேசுவை அறிமுகப்படுத்துங்கள். - **மத்தேயு 7:13 - 14**

✲ எவ்வளவு ஜனக்கூட்டம் வரும்? குறைந்தது ஆயிரம் பேராவது வந்தால்தான் வருவேன் என்று சொல்லும் சுவிசேஷகனுக்கு ஐயோ!

✲ கேட்டுக்கு போகும்வழி விசாலமாய் இருக்கும். நரகத்தில் தான் கூட்டம் அதிகம் என்பதை நினைத்து பாருங்கள். எண்ணிக்கை சிறிதாக இருந்தாலும் பத்து பேர் இருப்பினும் 'தேவ சித்தமானால்' ஊழியம் செய்ய பழகுங்கள்.

✲ பணம், பெண், புகழ் இம்மூன்றும் ஊழியனுக்கு குழி வெட்டும் சாத்தானின் தூதர்கள். **கலாத்தியர் 5:24,** பணத்திலும் பெண்ணி லும் விழாதவர்கள் கூட புகழுக்கு பாதகம் வரக் கூடாதே என்று அதன் புகழை தேடி அலைவதை அன்றாடம் காண்கிறோம். இதையும் சிலுவையில் அறைந்தால் தான் சிங்காசனம் கிடைக்கும்.

✿ உத்தமமாய் ஊழியம் செய்யும் உங்களுக்கு இதனால் ஆசீர்வாதமும் உண்டு. சுவிசேஷத்தை அறிவிப்பவர் களுக்கு அதினால் பிழைப்பும் உண்டாகும் என்று கர்த்தரும் கட்டளையிட்டுள்ளார். ரோமர் 15:27 உண்மையாய் ஊழியம் செய்யும் உங்களை கர்த்தர் கனப்படுத்து வார். I கொரிந்தியர் 9 : 14

✿ வேதத்தில் உள்ள பிலிப்புவைப் போல மந்திரியையும் கிறிஸ்துவுக்குள் நடத்த வேண்டுமானால் சில நேரம் வனாந்திரத்திற்கு போக நேரிடலாம். அதனால் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷத்தை உங்களால் உண்டாக்க முடியும் அல்லேலூயா!

அப்போஸ்தலர் 8 : 26
























# அமாவாசைக்கும், ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகளுக்கும் என்ன சம்பந்தம்?


அமாவாசை ஜெபங்கள் சென்னையில் இன்று பல இடங்களில் நடக்கிறது. அநேகருக்கு அது தவறு என்று தெரிந்திருந்தும் நாம் ஏன் கேட்பானேன்? எப்படியோ நடந்துவிட்டு போகட்டும். அதன் மூலம் நான்கு பேர் இரட்சிக்கப் பட்டால் சரி என்ற மனப்பாங்கே இருக்கிறது. இப்படி இரட்சிக்கப்பட்டவர்கள் நிலைத்து நிற்கிறார்களா? என்றால் அது சிந்திக்கவேண்டிய கேள்வி! இது குற்றப்படுத்தும் - குறை சொல்லும் ஆவியாயிற்றே! என சொல்லி, ஊழியங்களுக்கு எஜமான் இயேசு அல்லவா! அவரே இப்படிப்பட்ட நபர்களை சந்திக்கட்டும் என்கிறார்கள்.



☛ சில பேர் ஏற்கனவே ஆவிக்குரிய உலகம் கறை படிந்திருக்கிறது. ஆதி மேன்மையைக் காண முடிவதில்லை; ஆழமான பிரதிஷ்டையும் இல்லை; உலகத்தின் ஒத்த வேஷத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் ஓடிக்கொண்டு இருக்கிறார்கள்.

☛ இந்த சமயத்தில் இப்படிப்பட்ட அமாவாசை, பௌர்ணமி, முழு இரவு ஜெபம் என்று இவர்களும் தங்கள் பகுதிக்கு ஏதாவது தீக்கொளுத்தி விட்டால், பிறகு எல்லா சபைகளிலும் இது பரவ ஆரம்பிக்கும். - ரோமர் 12-2

☛ சரியா? தவறா? வேதத்தின் வசனங்களில் ஏதாவது ஆதாரம் உண்டா? இப்படி யோசிக்கிறவர்கள் குறைந்து போய்விட்டார்கள். மூட நம்பிக்கைகளும், அற்புதம் நடந்தால் போதும் என்று ஆசீர்வாதத்துக்காகவே உயிர் வாழும் ஆவிக்குரியவர்களை அன்றாடம் பார்க்கிறோம். கும்பலைக் கூட்டிச் சேர்ப்பது தான் ஊழியக்காரரின் குறிக்கோளாக இருக்கிறது. இதற்காக இவர்கள் எதையும் செய்வார்கள்.



✝ நல்விஷயத்தில் மேன்மை பாராட்டுவது நல்லது தான். ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள் புறஜாதி மார்க்கத்திலிருந்து இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றவர்களை குழப்பும். ஏற்கனவே இருக்கும் குழப்பங்கள் போதாதா?

கலாத்தியர் 4: 17, 18

✝ இப்படி இருக்க பிசாசின் போராட்டங்களில், சூனிய கட்டுகளில் சிக்கி தவிக்கும் ஜனங்களை நாங்களும் அமாவாசை இரவில் ஜெபிக்கிறோம். பௌர்ணமி நிலவில் ஜெபிக்கிறோம் என்று அறைகூவல் கொடுத்து ஊழியக்காரர்கள் அழைக்-கிறார்கள். இது போன்று சென்னையில் மாதம் இருமுறை ஒட்டப்படும் அமாவாசை, பௌர்ணமி போஸ்டர்கள் அநேகரை ஆச்சரியத்துக் - குள்ளாக்கும்.

✝ மந்திரவாதி அமாவாசையில் மந்திரம் செய்கிறானாம். எனவே, இவர்களும் அமாவாசையில் ஜெபிக்கிறார்களாம்! சபாஷ் சரியான போட்டி! என்று சொல்லி நம் சத்துருக்களும் கைகொட்டி சிரிக்கிறார்கள். இவர்கள் முழு இரவும் ஜெபித்தால் தவறில்லை முழு இரவு ஜெபம் என்று கூட்டம் நடத்தினாலும் தவறில்லை. ஆனால் ஆண்டவர் இயேசுவின் பிள்ளைகளுக்கும் இந்த அமாவாசைக்கும் என்ன சம்மந்தம் என்ற கேள்விக்குத்தான் விடை வேண்டும்.



வேதபுத்தகம் இதுபற்றி என்ன சொல்கிறது?

a. சாமுவேல் 20:24,27
b. II இராஜாக்கள் 4:23
c. ஏசாயா 47:13

மேற்கூறிய வசனங்களில் அமாவாசை (New Moon) என்ற வார்த்தைகள் வருகிறது. மேலும் இந்த வார்த்தையைக் குறித்த விளக்கங்கள். 1. Vine's Expository Dictionary 2. New Bible Dictionary 3. Concise Bible Dictionary 4. தமிழில் ஒத்துவாக்கிய அகராதி போன்ற புத்தகங்களின் துணை கொண்டு பார்த்தபோது

✝ நமது வேதத்தின் படி அமாவாசை என்பது முழு நிலவும் மறைந்து இருளாய் இருக்கும் நாள் அல்ல. அதற்கு அடுத்த நாள் சிறு கீற்றைப் போல் நிலவு தெரியும். அந்த நாளைத்தான் அமாவாசி என்றார்கள். அந்த நாள் மாதப் பிறப்பாக இருந்தது.



✿ அமாவாசி இஸ்ரவேல் மக்களின் மாதப் பண்டிகைகளில் ஒன்றாகும். அமாவாசை பண்டிகைகளாக இரண்டு மூன்று நாட்கள் கொண்டாடப்பட்டது. ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளிலும் இதை ஆசரித்தார்கள். இது ஓய்வு நாள் போல் கருதப்பட்டது. இந்நாட்களில் ஆண்டவருக்கு குறிப்பிட்ட பலிகளை செலுத்தினார்கள்.

✿ ஒவ்வொரு அமாவாசைக்கும் அடுத்த நாள் மலைகளில் நின்று வானத்தைப் பார்ப்பார்களாம். சின்ன கீற்றுபோல் முதல் நாளில் நிலவு தெரிந்தவுடன் எக்காளங்கள் ஊதி அறிவிப்பார்களாம். அந்நாட்களில் தனிப்பட்ட ஆராதனைகளும் நடந்திருக்கிறது. வேதத்தில் குறிப்பிட்டுள்ள அமாவாசை மாதப் பிறப்பு என்கிற வார்த்தைகள் ஒரே நாளையே குறிப்பிடுவதாகும். இஸ்ரவேலருக்கு மாதப்பிறப்பே அமாவாசை யாகும். அதாவது முதல் பிறை தோன்றும் நாள். ஆக... இஸ்ரவேல் மக்கள் மாதப்பிறப்பையும், அமாவாசை யையும் ஒன்றாக வைத்து கொண்டாடி இருக்கிறார்கள்.

இது சரியா? இதற்கு தேவன் சம்மதம் தெரிவித்தாரா? இக்காரியங்கள் அவருக்கு பிரியம் தானா?

★ பாபிலோனியர்களை பார்த்து தேவன் சொல்லுகிறார்.

**உன் திரளான யோசனைகளினால் நீ இளைத்துப் போனாய்**; இப்போதும் ஜோசியரும், நட்சத்திரம் பார்க்கிறவர்களும், அமாவாசி கணிக்கிறவர்களும் எழும்பி, உனக்கு நேரிடுகிறவைகளுக்கு உன்னை விலக்கி இரட்சிக்கட்டும்.

★ இதோ, அவர்கள் தாளடியைப் போல இருப்பார்கள். நெருப்பு அவர்களைச் சுட்டெரிக்கும். அவர்கள் தங்கள் பிராணனை அக்கினி ஜுவாலையினின்று விடுவிப்பதில்லை. ஏசாயா 47:13,14

★ நாம் ஆராதிக்கிற ஆண்டவருக்கு, இந்த நாள் நட்சத்திரம் பார்க்கிறவர்களைக் கண்டாலே அருவருப்பாக இருக்கும். மேலே உள்ள வசனத்தை திரும்ப ஒரு முறை வாசித்துப் பாருங்கள். அமாவாசி கணிக்கிறவர்களை (பார்க்கிறவர்களை) நெருப்பு சுட்டெரிக்கும் என்றல்லவா சொல்கிறது.

★ அவர் பட்சிக்கிற அக்கினி, அவருடைய துதியை வேறு ஒன்றிற்கும் கொடுக்க மாட்டார். இவர்கள் காலப்போக்கில் நிலவையும் ஒரு தெய்வமாக்கி தூபம் காட்டினார்கள். இஸ்ரவேலர் கன்றுகுட்டி தொடங்கி கார்வாலி மரம் வரை ஒன்றையும் விட்டு வைக்க வில்லை. தேவனின் கோபம் அக்கினியாய் பற்றி எரிந்தது.

★ ஆகவே அமாவாசி கணிப்பது கூடவே கூடாது. அமாவாசையில் பேய் விரட்டினால் அவைகள் ஓடும் மாற்கு **16:17** என்பது மூட நம்பிக்கை. இயேசுவின் நாமத்தை அவர் தந்த அதிகாரத்தின்படி சொன்னால் எந்த நேரத்திலும் பேய்கள் ஓடும். பேய் விரட்டுவது ஓர் வரம் என்று வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை.

★ II இராஜாக்கள் 4:23ல் காண்பது என்ன?

★ அப்போது அவன்: இது அமாவாசியும் அல்ல, ஓய்வு நாளும் அல்லவே; நீ இன்றைக்கு அவரிடத்துக்குப் போக வேண்டியது என்ன என்று கேட்கச் சொன்னான்...

★ சூனேமியா ஊரைச் சேர்ந்த ஸ்திரி எலிசா தீர்க்கதரிசியிடம் தன் மகன் மரித்த செய்தியை சொல்ல செல்கிறாள். அந்த சமயம் அவனது கணவன் சொல்லும் வார்த்தையைத்தான் வசனமாக வாசித்தோம்.

★ அந்நாட்களில் அமாவாசி (மாதப்பிறப்பு) முழுவதும் மறைந்த நிலவுக்கு அடுத்த நாள் .. தீர்க்கதரிசிகளை சந்தித்து ஜெபிக்கும் பழக்கம் இருந்திருக்கிறது. 1சாமுவேல் 20:5,24,27ல் நமக்கு புரிவது என்ன?

★ சவுல் ராஜாவின் நாட்களில் அரண்மனையில் எல்லோரும் சேர்ந்து அமாவாசியில் விருந்து பண்ணும் வழக்கம் இருந்திருக்கிறது. வேதத்தில் அமாவாசை நாட்கள் பண்டிகையாக கொண்டாடி இருக்கிறதைக் காண்கிறோம். விருந்தும் நடந்திருக் கிறது. இறுதியாக ... என்னதான் சொல்கிறோம்?

★ பகலிலே வெயிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உங்களை சேதப்படுத்துவதில்லை (சங்கீதம் 121:6). வானத்தில் இரவை ஆளத்தான் தேவன் சந்திரனைப் படைத்தாரே தவிர அதைக் கொண்டு போய் நாம் தேவனின் ஸ்தானத்தில் வைப்பதற்கு அல்ல.



★ ஜெபங்களும், முழு இரவு ஜெபங்களும், விடுதலைக் கூட்டங்களும் தொடரட்டும். ஆனால் அதில் அமாவாசை, பௌர்ணமி என்ற வார்த்தைகள் சேர்க்க வேண்டாம். அந்த நாளில் மட்டும் தான் பிசாசு அதிகமாக கிரியை செய்கிறான், என்ற மாயத் தோற்றத்தை உண்டாக்கவும் வேண்டாம்.

★ இப்போது சொல்லுங்கள் ... உங்களுக்குள் இருக்கும் தேவ ஆவியானவர் இதைக் குறித்து என்ன சாட்சி சொல்கிறார்?

★ பழைய ஏற்பாட்டில் நாள், காலம் பார்க்கும் சம்பிரதாயங்களை சிலுவையில் நிர்வாண கோலமாக்கி இயேசு வெற்றிச் சிறந்தாரே! கொலோசியர் **2:14, 15**புதிய ஏற்பாட்டில் நாம் கடைபிடிக்கும் இரண்டு சம்பிரதாயங்கள் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானமும், திருவிருந்தும் தான். எபேசியர் **5:26** மற்ற காரியங்கள் அடக்கம் செய்யப்பட்டு விட்டது.


★ இப்போது அமாவாசை என்று ஆரம்பித்தவர்கள் இன்னும் கொஞ்ச காலம் கழித்து பாட்டியம்மை என்றும், பிறகு கிருத்திகை ஜெபம் என்று வளர்ச்சி யடைந்து கொண்டே போவார்கள். ஊதுகிற சங்கை ஊதியிருக்கிறோம். விடியற்காலத்து வெளிச்சம் இவர்களை சந்திக்கட்டும்.

★ இக்கால கிறிஸ்தவனுக்கு அமாவாசையும், பௌர் ணமியும் இல்லவே இல்லை.

★ யாரையும் தனிப்பட்ட முறையில் தாக்குவதோ, தவறாக சொல்வதோ என் நோக்கம் அல்ல. பல நாட்கள் என் உள்ளத்தை வேதனைப்படுத்திய பாரத்தை பகிர்ந்து கொண்டேன்.

★ உன் சூரியன் இனி அஸ்தமிப்பதும் இல்லை. உன் சந்திரன் இனி மறைவதுமில்லை. கர்த்தரே நித்திய வெளிச்சமாயிருப்பார். உன் துக்க நாட்கள் முடிந்துபோம் (ஏசாயா 60:20)

★ **இனி உங்கள் கருத்துக்களை மறவாமல் எங்களுக்கு எழுதுங்கள்.**



# மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?

✤ ஓர் நாள், நான் இரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது என் அருகே ஒரு தேவ ஊழியர் வந்து உட்கார்ந்தார்.

✤ சற்று நேரத்திற்கு பிறகு பரஸ்பரம் சுகநலன்களை விசாரித்த பின்னர், ஊழியங்களைக் குறித்தும் விசுவாசிகளைக் குறித்தும் என்னோடு பேசிக் கொண்டே வந்தார். அந்த நேரம் எனக்குள் எழுந்த அக்கினியின் விளைவே இந்த தேவ செய்தியாக வெளிவந்துள்ளது.

✤ அவருடைய பேச்சிலிருந்து ... சில உண்மைகளை நான் சொல்ல நினைத்தேன். அதை அவரிடமே நேரில் சொன்னால் ... அவ்வளவு நன்றாக இருக்காது. என்னை விட வயதில் மூத்தவர். மட்டுமல்ல உண்மைகள் எப்போதும் சுடும் - சூடாக இருக்கும்.

✤ முதலாவது...

அந்தபோதகர் நான் விசுவாசத்தில் ஊழியம் செய்கிறேன் என்றார். உடனே எனக்குள் முள் குத்தியதுபோல் இருந்தது ஏன்?

✤ இது என்ன வேடிக்கை! விசுவாசம் இல்லாவிட்டால் ஆவிக்குரிய வாழ்வே இல்லையே? பிறகு எப்படி ஊழியம் செய்வது? எதற்காக இப்படிச் சொன்னார் என்று யோசித்துப் பார்த்தேன்.

✤ அதாவது வெளிநாட்டு உதவிகள் இல்லாமல் உள்நாட்டையே நம்பி செய்யும் ஊழியத்திற்கான வார்த்தைதான் இது என்று அவரே புரியவும் வைத்தார். அத்துடன் வெளியிலிருந்து உதவிகள் வரவில்லையே என்ற அவரது ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினார்.





✤ பல பேர் விசுவாச ஊழியம் விசுவாச ஊழியம் என்று பேசுகிறார்கள்...., இதை சற்று சிந்தித்து பார்ப்போம் தவறு சிறியதாக இருக்கும்போதே திருத்திக் கொள்ளுவோம்

✤ ஆரம்ப அடி எடுத்து வைக்கும்போதே விசுவாசம் தான் தொடக்கம். அது இரட்சிப்பில் ஆரம்பித்து மத்திய ஆகாயத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சந்திக்கும் நாள் வரை தொடர வேண்டி உள்ளது.

✤ இயேசுவை ஆண்டவராக பார்க்க விசுவாசம் தேவை. அடுத்து அப்பா என்றழைக்க விசுவாசம் தேவை. அவரை குருவாக பார்த்து சீஷனாக மாற விசுவாசம் தேவை. பிறகு எஜமானாக வைத்து வேலைக்காரனாக உழைக்க விசுவாசம் தேவை. இறுதியில் மணவாளனாக தரிசித்து மணவாட்டியாக மாற விசுவாசம் தேவை.

✤ ஆகவே நீங்கள் இயேசுவை எஜமானாக ஏற்றுக் கொள்ள விசுவாசம் இருந்தால் ஊழியம் செய்யுங்கள். அவர் படி அளப்பார். பாவத்திற்கே சம்பளம் உண்டு என்றால்...., நீங்கள் பரிசுத்தமாக இருந்தால் சம்பளம் நிச்சயமாகவே கிடைக்கும் ரோமர் 6: 22, 23 அதிலும் உங்கள் எஜமானன் தயாளபிரபு என்பதையும் மறந்து போக வேண்டாம்.

✤ இயேசுவின் பேரில் இருக்கிற விசுவாசத்திற்காகத்தான் ஊழியம் செய்கிறோமே தவிர.... ஊழியத்திற்காக விசுவாசம் வரவழைத்து கொண்டால் அது ஆபத்து தானே? பணத்திற்காக அல்ல; இயேசுவின் மீதுள்ள பாசத்திற்காகத்தான் ஊழியம் செய்ய வேண்டும்.

✤ பென்ஷன் அரசாங்கத்தில் தருகிற நாள்வரை உழைத்துவிட்டு.... உலக அரசாங்கம் தள்ளிய பிறகு பரலோக அரசாங்கத்தில் வேலை தேடினால்_ உங்கள் விசுவாசம் நிச்சயம் பரிசோதிக்கப்படும்.

✤ கர்த்தர் தரும் காணிக்கை மேல் விசுவாசம் வைக்காமல் அரசாங்கம் தரும் பென்ஷன் மேல் விசுவாசம் இருக்கும்போது உங்களது வேலையை ஊழியம் என்று சொல்வதே தவறு.

✤ பலிபீடத்தில் பணிவிடை செய்கிறவர்களுக்கு பங்குண்டு என்பதே பரிசுத்த வேதாகமம் சொல்லித் தருகிற பாடம்.

மத்தேயு 17: 24 - 27

✤ இயேசு பேதுருவிடம் மீனின் வாயிலுள்ள வெள்ளிக் காசை எடுத்து உனக்காகவும் எனக்காகவும் வரி செலுத்து என்றாரே! அவருக்கு மட்டும் செலுத்தி கொள்ளவில்லை. லூக்கா 10:4 தன்னை நம்பி வந்தவர்களுக்கும் சேர்த்து வரி செலுத்தினார். இதை விசுவாசிக்கின்றீர் களா?

✤ பணப்பையும், சாமான் பையையும் இல்லாமல் ஊழியத்திற்கு சீஷர்களை அனுப்பினாரே? திரும்பி வந்த பின்னர் ஒன்றும் குறைவாக இருக்கவில்லை என அவர்கள் சாட்சி தந்தார்களே? இதை விசுவாசிக் கிறீர்களா?

✤ அப்படியானால் ..., உங்கள் ஆரம்ப காலத்தில் இருந்த விசுவாசம் எங்கே? அமெரிக்கர்களை, அயல்நாட்டு ஊழியரை ஆதாயப்படுத்தும் பாஸ்டரே இந்தியாவில் பெரிய பாஸ்டர்என்று அழைக்கப்படுகிறார்.

✤ நீங்கள் அவர்களிடம் கேட்டுப் பாருங்களேன் வந்து சென்ற வெள்ளைக்காரர் 150 ரூபாய் தந்து விட்டு போனார் என்று புலம்பி கொண்டு இருப்பார்.

✤ நாங்கள் சொந்த வருமானத்தில் தான் ஊழியம் செய்வோம். மற்றவரிடம் கையேந்தி காணிக்கை வாங்கமாட்டோம் என்று வரட்டு கவுரவத்தில் பேசுகிறவர்களை பார்க்கும்போது மனதிற்குள் வேதனைப் படுகிறேன்.

✤ நீங்கள் செய்வது உண்மையான ஊழியமாய் இருந்தால் தருகிற காணிக்கை கர்த்தருக்கு தரப்படும் கனம் ஆகும். உங்களுக்கு அல்ல என்பதை உணர்ந்து இனி அவ்விதம் வீண்வார்த்தைகளை பேசாதிருங்கள்.

✤ இவரது ஊழியம் **விசுவாசம் இல்லாத ஊழியம்** என்றும்..., அயல்நாட்டு உதவி இல்லாமல் செய்யும் ஊழியம் **விசுவாச ஊழியம்** என்றும் தற்போதைய ஆவிக்குரிய உலகில் கணிக்கப்படுகிறது.

✤ இங்கே நான் சொல்ல வருவது என்னவென்றால்.., இரு தரத்தாரின் அடிப்படை அஸ்திபாரமே கோளாறு என்பது தான். நோக்கங்கள் தவறும்போது எல்லாமே பாவமாகிறது.

✤ உண்மையான உயிருள்ள விசுவாசத்துடன் ஆவிக்குரிய வாழ்வை தொடங்கினவர்கள்...., விசுவாச வரத்துடன் ஊழியத்தை ஸ்தாபிப்பார்கள்.



✤ காலம் சென்ற ஒரு போதகரிடம் வெளிநாட்டு மிஷினரி ஒருவர் வந்து ஐயா, இந்த பெரும்தொகையை பெற்றுக் கொள்ளுங்கள் என்றார். அதற்கு அவர் இந்த பணத்தை வாங்க மாட்டேன். இதை வாங்கும்படி எனக்கு கர்த்தர் உத்தரவு தரவில்லை என்று சொன்னாராம்.

✤ காலங்கள் பல ஓடி மறைந்து விட்டது. இன்றைக்கு அவரது சபைதான் சென்னையில் தரமுள்ள ஆவிக் குரிய பெரிய சபையாக விளங்குகிறது. அல்லேலூயா!.

✤ கேயாசின் இருதயம் நாகமானை பின் தொடர்ந்து சென்றது. விளைவு நாகமானின் குஷ்ட ரோகம் இவனை பிடித்தது. **2 இராஜாக்கள் 5 : 20 - 27**

✤ வெளிநாட்டுக்காரர்கள் தங்கள் பணத்தில் உண்மையாக இருந்து இவர்களுக்கு காணிக்கை கொடுக்கிறார்கள். **நீதிமொழிகள் 28:20** அவர்கள் தரும் காணிக்கைக்கு நம்மவர்கள் உண்மையாக இல்லா விட்டால் கஷ்டம் தொடர்ந்து வந்து குஷ்டம் பிடிக்க வைக்கிறது.

✤ வெளிநாட்டு உதவி வாங்கி உத்தமமாக வாழாத ஊழியக்காரரின் குடும்ப வாழ்க்கை நரகமாகி விட்டதை நான் பார்க்கிறேன்.

✤ அதிகமாய் கொடுக்கப்படும் போது அதற்கேற்றபடி பரலோகத்தில் அதிகமாய் கணக்கு கேட்கப்படும் என்பது வேத பிரமாணம்.

✤ நாயின் கிரயத்தையும் (பின்மாற்றம் அடைந்தவர்கள் பணத்தையும்) வேசியின் பணையத்தையும், ஆலயத்திற்குள் காணிக்கையாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. அது ஊழியத்திற்கு வேதனையாக முடியும்.

✤ இரண்டாவதாக, இந்நாட்களில் கிறிஸ்த்வ உலகில் விசுவாச துரோகம் அதிகமாகி உள்ளதே என்று குறைபட்டு கொண்டார். **2 தெசலோனிக்கியர் 2 : 3**

✤ அதற்கு காரணம்..., இப்போது உள்ளவர்கள் விசுவாச பிரமாணம் என்பதே தெரியாமல் இருப்பதால் தான்... விசுவாசத் துரோகம் செய்கிறார்கள் என்றேன்.

✤ அக்கால பாரம்பரிய சபைகளில் ஒவ்வொரு முறையும் விசுவாசிகளை விசுவாச பிரமாணம் சொல்ல வைப் பார்கள். இரட்சிப்பு உண்டாக வாயினால் அறிக்கை செய்கிறார்கள்.



✤ ஆனால் நீதி உண்டாக அதை இருதயத்தில் விசுவாசிக்கிறார்களா? என்றால் அது தான் முக்கியமான கேள்வி? தற்போது திருவிருந்து எடுக்கும் முன்னர் மாதத்திற்கு ஒரு முறையாகிலும் ஆவிக்குரிய சபைகளில் விசுவாசிகளை விசுவாச பிரமாணம் சொல்ல வைக்க வேண்டும். ரோமர் 10:9, 10

✤ அற்புதங்களை விசுவாசிக்கும் அளவிற்கு இக்கால விசுவாசிகள் வேத வசனத்தை விசுவாசிப்பதில்லை ஏன்? இவர்கள் இரட்சிப்பு மனம் திரும்புதலினால் ஏற்படவில்லை. மனம் பேதலித்ததால் ஏற்பட்டது. மத்தேயு 25:21

✤ விசுவாசபிரமாணத்திற்கு ஏற்ப இவர்களது விசுவாசம் அமைந்தால்; மனுஷ குமாரன் வரும்பொழுது, நல்லது உண்மையும் உத்தமமான உள்ள ஊழியக்காரனே; எஜமானின் சந்தோஷத்தில் பிரவேசி என்பார்.

✤ பண ஆசையினால் பகட்டுக்கும், பதவிக்காகவும், தனக்கு சமுதாய அங்கீகாரம் கிடைக்கும் என்றும் சிலர் ஊழியத்துக்கு வருகிறார்கள். ஆகவே கிறிஸ்தவர்களாய் வாழ்ந்து காட்ட முடியாமல், நடித்து காட்டிக் கொண்டிருக்கும் ஒருவருக்கு விசுவாசம் என்பது புரிந்து கொள்ள முடியாத புதிர். மத்தேயு 25:21

✤ அவரது ரூபத்தின்படி மட்டுமல்ல, ஆண்டவரின் சாயலின்படி மனிதனை படைத்தார். ஆனால் இன்றைய மறுபிறப்பில் ரூபம் இருக்கிறது. யாரிடமாவது சாயல் இருக்கிறதா என்று தேடிப் பாருங்கள். ஆதியாகமம் 1: 26, 27

✤ தெய்வீக சுபாவங்கள், திவ்ய குணங்கள் இருந்திருந்தால் யாரும் எந்த ஊழியமும் செய்யாவிட்டாலும் இந்தியா இரட்சிக்கப்பட்டிருக்குமே. எபேசியர் 4: 23, 24

✤ இக்கால பிரசங்கியார் செய்த மிகப்பெரிய தவறு, மனதுருக்கம், ஆறுதல், அற்புதம், தலையில் கைவைத்து கீழே தள்ளுதல் என்ற அளவில் அவர்களையும், ஊழியத்தையும் கட்டுகிறார்களே தவிர, வசனத்தை சொல்லி, முழ்கி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என்ற சுத்தமான சுவிசேஷத்தை கொடுத்து விசுவாசத்தில் மற்றவர்களை உருவாக்குவதில்லை. 1 தெசலோனக்கியர் 1 - 5





போதகர்கள்

# சத்திய மார்க்கத்தை போதியுங்கள்

★ ஒரு முறை துக்க வீட்டிற்கு சென்றிருந்தேன். மரித்தவரை பெட்டியில் வைத்து அரை நாள் ஆகிவிட்டது. கல்லறைக்கு கொண்டு செல்ல வேண்டிய நேரம் கடந்து விட்டது. ஆனால் அதற்கு வழிவிடாமல் ஒவ்வொரு சபை போதகரும் மாற்றி மாற்றி செய்திகளை தந்துகொண்டே இருந்தனர்.

★ காரணம் ... மரித்தவர் மிகப்பெரிய பணக்காரர். ஆகவே அந்த நேரத்திலும் அவரவர் தங்கள் தங்கள் பகுதிக்கு தாங்கள் யார் என்ற பெருமையை நிலைநாட்ட முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

★ ஏன் இந்த வம்பு? மரித்துப்போன பணக்கார சகோதரர் ஒரு சபைக்கு என ஒழுங்காக போகாமல்; ஒவ்வொரு சபையாக ஏறி இறங்கினபடியால் எல்லோரிடமிருந்தும் தர்க்கம் பலமாய் இருந்தது. தாங்களே இவருக்கு எல்லாமுமாய் இருந்தோம். ஆகவே முழு உரிமையும் எங்களுக்கே என வாய் ஒவ்வொரு சபையினரின் ஜாலங்கள் அதிகரித்துக் கொண்டிருந்த சமயம்...

★ ஆவிக்குரிய சபையைச் சேர்ந்த சகோதரிகள் வந்திருந்து மரித்தவர் மாலை ஆராதனைக்கு எங்கள் சபைக்குத்தான் வருவார் என்று சொல்லி அனைவரின் வாயையும் அடைத்தனர்.

★ பிறகு... பரலோகமே என் சொந்தமே எனப்பாடத் தொடங்கி அந்த பாடலின் ஏழு சரணத்தையும் பாடி முடித்த பின்னர்_ தமிழில் அவர்களில் ஒரு சகோதரன் செய்தி தர ஆங்கில மொழி பெயர்ப்புடன் அடுத்த செய்தி ஆரம்பானது.

★ எப்படி இருந்திருக்கும் என யோசித்துப் பாருங்கள். மரித்த சகோதரனின் உறவினர்கள் இன்னும் இரட்சிக்கப்படாதவர்கள் போலிருக்கிறது. அவர்கள் எல்லாரையும் தூஷிக்கத் தொடங்கினார்கள். கிறிஸ்தவ மார்க்கமே, ஒழுங்கில்லாதது என்று திட்டினார்கள்.



அப்போதுதான் இந்த II பேதுரு 2:2 வசனம் என் உள்ளத்தில் எழும்பி நின்று எனனை வெட்டியது போல் உணர்ந்தேன். ஆகவே இதை எழுதத் தொடங்கினேன்.

☆ மார்க்கம் என்னவோ சத்தியமார்க்கம் தான். அதில் சந்தேகமே இல்லை. ஆனால் அதை பின்பற்றுகிறவர்கள் செய்யும் கேடு பாடுகளால் அது தூஷிக்கப் படுகிறது.

☆ விசுவாசிகளால் ஊழியர்கள் இந்த நிலைக்கு ஆளானார்களா? அல்லது ஊழியர்களால் விசுவாசிகள் கெட்டுப் போனார்களா? என்று பட்டிமன்றம் நடத்துவதைவிட இதற்கு என்ன சிகிச்சை தரலாம் என யோசித்தால்...

சத்திய மார்க்கம் சாட்சியாக விளங்கும்.

☆ இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் தங்கள் ஆத்துமாவுக்கு உத்தரவாதம் கொடுக்கிற ஒரு ஊழியக்காரரை கண்டுபிடித்து அவரின் ஆலோசனைக்கு கீழ்ப்படிந்து நடப்பது ஆசீர்வாதமாக அமையும்.

☆ மற்ற அநேக ஊழியர்களோடும், மற்ற சபை விசுவாசிகளோடும் பழகுவதில் தவறு இல்லை. ஆனால் சுவிசேஷத்தினால் நம்மைப் பெற்று எடுத்தவர் ஆவிக்குரிய தகப்பன். மற்றவர்கள் ஆவிக்குரிய ஆசிரியர்களே.

☆ இந்த அடிப்படையில் விசுவாசிகள் வாழ்ந்தால்... மரணத்திற்குப் பிறகு இப்படி அநேகர் சூழ்ந்து கொண்டு குழப்பங்களை ஏற்படுத்த அவசியம் இருக்காது.

☆ அடுத்து இந்த மரண வீட்டில் நடக்கும் ஆராதனை ஒழுங்குகளும் திட்டமாய் போதிக்கப்பட வேண்டும்.

☆ எப்போதும் பாாரம்பரிய சபைப் பிரிவுகளில் இப்படித்தான் இருக்க வேண்டும் என ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தி கிரமமாக நடப்பிப்பார்கள்

☆ தனிப்பட்ட முறையில் இயங்கும் ஆவிக்குரிய சபைப் பிரிவுகள் புதியதாக தொடங்கப்பட்ட ஆலயங்கள், வளர்ச்சி அடையாத யாரோடும் ஐக்கியம் வைக்காத பாஸ்டர்கள்தான்; இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்குள் சிக்கிக்கொள்கின்றனர்.



எங்கே அடக்கம் செய்வது என்பது அடுத்த கேள்வி? இதற்கு சபை தொடங்கும்போதே எங்கேயாவது புறம் போக்கு நிலங்கள், கரம்பு நிலங்கள் என சபைக்கு ஒரு கல்லறைத் தோட்டம் வாங்கப்பட வேண்டும்.

அந்த சபை வசதிக்குத்தக்க விதத்தில் மூன்று சென்ட் நிலம் முதல் எவ்வளவு பெரிய இடமும் வாங்கிக் கொள்ளலாம். அதில் சும்மா இருக்கவிடாமல் மரக்கன்றுகளை நட்டு, மரங்களை உண்டாக்கினால் ஆசீர்வாதமாக அமையும்.

கல்லறைத் தோட்டம் சபையார் ஒரு நாள் சென்று ஜெபிக்கிற இடமாகவும், முகாம்கள் நடத்துகிற இடமாகவும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மரங்கள் வளர்ந்து ஐந்து, பத்து வருடங்களுக்குப் பிறகு இடத்திற்கென செலவு செய்த பணத்திற்கு வருமானமாகவும் அமையும்.


சபைக்கு என சொந்தமாக கல்லறைத் தோட்டம் இருப்பது சந்தோஷமான செய்தியாகும். அதில் ஒரு ஏழைக் குடும்பத்தாரை தங்க வைத்து, பராமரிக்கும்படி வேலையும் தந்தால் அவர்களுக்கும் பிழைப்பு உண்டாகும்.

மரித்தவரை கறுப்பு பெட்டியில் வைப்பதா, வெள்ளைப் பெட்டியில் வைப்பதா என அடுத்த வாதம் எழுந்ததைப் பார்த்தேன்.

குழியில் பெட்டி வைக்கும் முன்னர் ஒரு சாரார் ஒரு மூட்டை உப்பை கொட்டி பின்னர் பெட்டியை இறக்கி வைக்கச் சொன்னார்கள். இந்த சண்டைக்கு எப்படி தீர்வு?

எல்லோரும் ஒரு பிடி மண் அள்ளிபோட்டு மூடிய பின்னர் வீட்டிற்கு சென்று செய்ய வேண்டியவை ஏதேனும் உண்டா என்று ஒவ்வொருவராக கேள்வி கேட்டுக் கொண்டிருந்த அந்த குடும்பத்தாருக்கு எந்த ஊழியரும் சரியான பதில் சொல்லவில்லை.

இவர்கள் பிரசங்கம் செய்வது என்றால் முன்னுக்கு வந்துவிடுகிறார்கள். ஏதாவது பிரச்சனை, கேள்விகள்? எப்படி தீர்ப்பது என்று புரியாமல் கேட்டால் - நமக்கு ஏன் பிரச்சனை என ஒவ்வொருவராய் நழுவி விடுகிறார்கள்.



♫ எவ்வளவு நாள் துக்கம் கொண்டாடுவது? எப்போது ஸ்தோத்திரக் கூட்டம் வைப்பது? திரும்ப கல்லறைக்கு பால் ஊற்ற வேண்டுமா? இரட்சிக்கப்படாத உறவினர்களிடம் என்ன சொல்லி அனுப்புவது என்று அந்த வீட்டார் புரியாமல் கேட்ட கேள்விகளுக்கு பதில் கூற ஒருவரும் முன் வரவில்லை.

♫ எங்களுக்கு அடுத்த ஊழியம் இருக்கிறது என கூறி ஆளுக்கொரு திசையில் சென்று மறைந்தார்கள்.

♫ ஏற்கனவே மரணம் வந்த வீட்டில் இருந்த துக்கம் ஒரு புறம். மறுபுறம் .... என்ன செய்வது? எப்படி நடத்துவது என தடுமாறி நின்ற சூழ்நிலைகள்

♫ ஆவிக்குரியவர்கள், வளர்ந்த மேய்ப்பர்கள், சபைப் போதகர்கள் கூடி ஒழுங்குகளை ஏற்படுத்தினால் எத்தனை நலமாய் இருக்கும். செய்வார்களா?

♫ அரசாங்கத்தில் வாங்க வேண்டிய சர்டிபிகேட், கல்லறையில் கொடுக்கிற சர்டிபிகேட், ஆலயத்தில் போதகர் தரும் சர்டிபிகேட் போன்றவற்றிற்கும் ஒரு ஒழுங்குமுறைகள் இருந்தால் இலகுவாய் இருக்கும்.

♫ ஏதோ எனக்குள் எழுந்த குமுறலை கொட்டி இருக்கிறேன். ஊதுகிற சங்கினை ஊதி இருக்கிறேன். இதற்கு எல்லாம் ஒரு தீர்வு ஏற்பட்டால் சத்தியமார்க்கம் சாவிலும் சாட்சியாக விளங்கும். தூஷிக்கப்படாது.

மேய்ப்பர்களுக்கு

# வீடு சந்திப்பு ஊழியம்

''தேவனின் ஆலயத்தை தாங்கி நிற்பது விசுவாசிகளின் வீடுகளே'' என்றார் ஒரு தேவ ஊழியர்.

இதில் வீடு சந்திப்பு என்பது கவனமாக கருத்துடன் செய்ய வேண்டிய ஊழியத்தின் ஒரு பகுதி. ஆகவே அதைக் குறித்து இனி சிந்திப்போம்.

ஒரே விசுவாசியின் வீட்டுக்கு தொடர்ந்து செல்வது மேய்ப்பனின் கழுத்துக்கு கத்தி ஆயத்தமாகிறது என்று அர்த்தம்.

மற்றவர் சலித்துக் கொள்ளும்படி அடிக்கடி ஒருவர் வீட்டிற்கு செல்வது ஆபத்துதானே?.... தகுந்த காரணம் இல்லர்மல் அடிக்கடி எந்த விசுவாசி வீட்டுக்கும் போகக் கூடாது.

அதே சமயம் பல மாதங்களாகியும் ஒரு வீட்டை சந்திக்காமல் இருக்கவும் கூடாது.

பெரிய சபைக்கு போகிறேன் என்று பெருமை பேசும் விசுவாசிகளுக்கு எந்த மேய்ப்பனும் தனிப்பட்ட ஆலோசனைகளை தந்து வீடுகளை சந்தித்து ஜெபிப்பது இல்லை.

இதனால் இவர்கள் வீடு வீடாக சென்று ஜெபக்கூட்டத்தில் பங்கு எடுப்பார்கள். கடைசியில் பத்து வருடமாகியும் புட்டிப்பால் குடிக்கும் ஆவிக்குரிய குழந்தைகளாகவே இருப்பதை பார்க்கும்போது மனதிற்கு மிகப் பெரிய வேதனை.

இதில் இன்னும் பெரிய கஷ்டம் என்னவென்றால்... இவர்களே சரியான ஆவிக்குரிய வளர்ச்சி இல்லாதவர்களாக இருப்பார்கள். இந்த அழகில் இவர்கள் வீட்டிலும் ஜெபக்கூட்டம் நடத்துவார்கள்.

கேட்பாரும், மேய்ப்பாரும் இல்லாததால்தான் பெரிய சபைக்கு போகிறோம் என்றார் பின்மாற்றத்தில் உள்ள ஒரு விசுவாசி.

மாதாமாதம் ஒரு வீட்டை சந்திக்கும்போது... அவர்கள் ஜெபிக்கிறார்களா? வேதத்தை வாசிக்கிறார்களா? ஆலய ஆராதனைக்கு சரியான நேரத்தில் பங்கு எடுக்கிறார்களா? ஆவிக்குரிய வளர்ச்சி எப்படி உள்ளது? என பரிசோதித்து தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குவது மேய்ப்பனின் கடமை.

**எபேசியர் 4:11, 15**

ஒரு வீட்டிற்கு சென்றவுடன் அந்த வீட்டில் உள்ள பிரச்சனையை மட்டும் பேச வேண்டும் அடுத்தவர்களைப் பற்றி; மூன்றாவது நபர்களைப் பற்றி எக்காரணத்தை முன்னிட்டும் பேசக்கூடாது. இதுதான் வீடு சந்திப்பில் அபாயகரமான பகுதி.

கோள் சொல்லுபவர்களை விட "கோள் கேட்கும் காதுகளுக்குத் தான் குப்பைத் தொட்டி என்று பெயர்" என பிரசங்கியார் ஒருவர் சொல்லக் கேட்டேன்.

தேவை இல்லாத அவசியம் இல்லாத எந்த செய்தியும் உங்கள் காதுகளுக்கு செல்வதை தடுத்து நிறுத்த வேண்டும்.

வீட்டிற்குச் சென்றவுடன் முதலாவது சுகநலன்களை விசாரித்தல் பின்னர் உபசரித்தல், டீ, காபி, டிபன் போன்றதை சாப்பிடுதல், இறுதியாக சமயத்துக்கேற்ற ஆவிக்குரிய பாடலைப்பாடி வசனத்தை பேசி கருத்தாய் ஜெபித்து முடித்தல் - என்று அமைந்தால், அது ஆசீர்வாதமாக இருக்கும்.

சில நேரங்களில் வீட்டில் மணிக்கணக்காக பிரச்சனை களை பேசி, இறுதியில் "சுருக்கமாக" ஜெபித்து பின்னர் வீட்டுப் படிக்கட்டில் பேசி, தொடர்ந்து

தெருமுனைவரைக்கும் அதே விஷயத்தை மடக்கி, மடக்கி பேசுவது ஊழியத்தை வீணாக்கும்.

- ஒரு காரியத்துக்காக ஜெபித்த பின்னர் மறு படியும் அதே பிரச்சனையை பேசினால் ஜெபத்தின் வல்லமையை குறைத்து மதிப்பிடுவது போலாகும்.

- இந்த பிரிஜ் எங்கே வாங்கினீர்கள்? இந்த மிக்ஸி எங்கே வாங்கினீர்கள்? என்ற தேவை இல்லாத வார்த்தைகளை தவிர்ப்பது ஆவிக்குரிய பிரசன்னத்தை காத்துக் கொள்ள உதவியாக இருக்கும்.

- மற்ற மந்தைக்குள் இருக்கும் ஆடுகளை அந்த அந்த மேய்ப்பன் சென்று விசாரிப்பார். பக்க வழியாய் கள்ள ஊழியர் நுழைவது வீடுகளுக்குள் வீணான குழப்பத்தை உண்டாக்கும். இதை ஊழியர்கள் தவிர்க்க வேண்டும்.

- ஒரு வீட்டிற்கு பத்து ஊழியக்காரர்கள் மாதம் முழுவதும் படையெடுத்தால் விசுவாசி நிலை என்னவாயிருக்கும்?

- என் ஆத்துமாவுக்கு உத்தரவாதம் செய்ய முடியுமா? என வீட்டிற்கு வரும் ஊழியர்களிடம் கேளுங்கள். அப்படிப்பட்ட ஊழியர்களை மட்டுமே வீட்டிற்குள் அனுமதியுங்கள். அவர்கள் உண்மையாய் நேசித்து, ஜெபிப்பது உங்களுக்கும் குடும்பத்திற்கும் மிகப்பெரிய ஆசீர்வாதம். எபிரெயர் 13:17

- ஒருவர் வீட்டில் நுழையும்போதே அந்த இட்டிலியும், தேங்காய் சட்னியும் இருந்தால் நல்லது என சொல்லிக் கொண்டே உட்கார்ந்தார். நமது வயிறு நிறைவதைவிட அந்த வீட்டாரின் உள்ளம் நிறையும்படி நடந்து கொண் டால் அந்த வீடும் தேவனின் ஆலயமாக மாறும். பிலிப்பியர் 3:19, ரோமர் 16:17, 18


- ஒரு வீட்டை சந்திக்கும்போது ஊழியர் கவனிக்க வேண்டிய முக்கியமான காரியம். நேரத்தை குறித்ததாக இருக்கிறது. சிலர் காலை நேரத்தில் வீட்டை சந்திக்க வருவார்கள். ஒவ்வொரு வீடும் காலை நேரத்தில் தலைகால் புரியாமல் அவசரத்தில் பறந்து கொண்டு இருப்பார்கள். அந்த சமயத்தில் ஸ்தோத்திரம் சிஸ்டர் என்று ஊழியர் போய் நின்றால் எப்படி இருக்கும்? ஆகவே போயிருக்கும் வீட்டில் சூழ்நிலையை பார்த்து புரிந்து கொண்டு நடக்கணும், பழகணும். இரவு பத்து மணிக்கு மேல் செல்லவும் கூடாது. இதுவும் வீண் பிரச்சனைகளிலிருந்து விலக்கும்.

- சிலர் வீடு சந்திக்க வந்தால் எப்போது புறப்பட்டு போவார்களோ என்று பெருமூச்சு விடும்படி இருக்கும். வீணான காரியங்களை அலப்பி- அறுத்துக் கொண்டு இருப்பார்கள். இதை தவிர்க்கணும்.

- முன்கூட்டியே சந்திக்க வரும் வசதியான நேரத்தை தீர்மானிப்பது இருதரத்தாருக்கும் நல்ல உறவை கட்டி எழுப்பும்

- தனி ஒரு ஆளாக வீடு சந்திக்க செல்வதை விட இருவராய் செல்வது பரிசுத்தத்திற்கு பாதுகாப்பாக இருக்கும்

- தனி நபர் தனித்தனியாய் இருக்கும் நபரிடம் சந்தித்துப் பேசும்போது பேச்சு சுருக்கமாக இருந்தால் பாவங்கள் அணுகாது.



# பதினோராம் மணி ஊழியங்கள்

## துதிக்க, ஜெபிக்க

| | | |
|---|---|---|
| ஆரம்பித்தது | : | 1994 ஆம் ஆண்டு |
| பதிவு | : | அறமத நிறுவனம் 12 A License |
| செயல்படும் முறைகள் | : | ஏழு விதங்களில் |
| பணியாளர்கள் | : | பத்துபேர் |

### பதினோராம் மணி ஊழியம்

*தரிசனம்:*

பதினோராம் மணிவேளையிலும் அவன் போய் சும்மா நிற்கிற வேறு சிலரைக்கண்டு; நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன என்று கேட்டான்.

**அதற்கு அவர்கள் ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர்களை நோக்கி; நீங்களும் திராட்சத் தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி கூலி பெற்றுக் கொள்வீர்கள், என்றான்** – மத்தேயு 20:6

வசனத்தின்படியே இக்கடைசி காலத்தில் அவரது திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்ய அழைப்புப் பெற்றதே இவ்வூழியத்தின் ஆரம்பம். இதன் மூலம் ஏழு விதங்களில் சத்தியத்தை ஜனங்களுக்கு கொண்டு செல்கிறோம். இந்திய அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டு பரலோகத்தின் அங்கீகாரத்துடன் செயல்படுவதே பதினோராம் மணி ஊழியமாகும்.

கடந்த பதினொரு ஆண்டுகளாய் தேவன் நடத்தி வந்த பாதைகளுக்கு ஸ்தோத்திரம்! மகிமையின் செங்கோல் மாதப்பத்திரிக்கையும் மகிமையாய் ஒவ்வொரு மாதமும் வெளிவருவதற்காக ஸ்தோத்திரம்! நாளுக்குநாள் வளர்ந்து வரும் அலுவலக வேலைகளை நேர்த்தியாய் செய்ய கணினிகள் (Computer) கிடைக்க வேண்டுமென ஜெபிப்போம்.

### மகிமையின் தேவாலயம்

ஐந்து இடங்களில் உள்ள கிளைசபைகள் தேவநாமம் மகிமைப்படும் படியாக வளருவதற்காக ஸ்தோத்திரம்!

சென்னையில் உள்ள தலைமை சபைக்கு சொந்த இடம் கிடைக்க ஜெபிப்போம்.

### கிறிஸ்துவுக்காக சிறுவர்கள்

கடந்த இருபத்திரெண்டு ஆண்டுகளாய் இந்த ஊழியத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான தம்பி தங்கையருக்காகவும் ஆசிரியர்களுக்காகவும் ஸ்தோத்திரம்!

உடல் ஊனமுற்ற, மனவளர்ச்சி பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு பள்ளிக்கூடங்கள் தொடங்க வேண்டும் என மன்றாடுவோம்.

### ஒலி & ஒளி நாடா ஊழியங்கள்

Dr. டெரிக் பிரின்ஸ் ஊழியத்தின் ஒலிநாடா பதிவு செய்யும் பொருப்பாளராக செயல்பட தேவன் தந்த வாய்ப்பிற்காக ஸ்தோத்திரம்!

வீடியோ, ஆடியோ, கேசட்டுகள் பதிவு செய்யும் கருவிகள் கிடைக்க வேண்டுமென ஜெபிப்போம்.

### வாலிபர் ஊழியம்

இதுவரை அநேக சகோதர, சகோதரிகள், ஊழியர்களாக உருவாக்கப்பட்டு தேவ நாமத்தை மகிமைப்படுத்தி வருவதற்காக ஸ்தோத்திரம்!

குளோரி வேதாகமக் கல்லூரிக்கு என இடம் வாங்கி கட்டிடம் கட்டப்பட ஜெபிப்போம்.

### பதினோராம் மணி பதிப்பகம்

5, புத்தகங்கள் வெயிட்டதற்காக ஸ்தோத்திரம்!

சொந்தமாக அச்சுக்கூடம் (Press) ஒன்று ஆண்டவர் அமைத்து தர ஜெபிப்போம்.

### விடுதலையின் மையம்

மூன்று மருத்துவமனைகளில் நடந்து வரும் ஊழியங்களுக்காக ஸ்தோத்திரம்!

எய்ட்ஸ் நோயாளிகளுக்காக ஒரு விடுதி திறக்கப்பட வேண்டுமென ஜெபிப்போம்.

### குளோரி வேதாகம கல்லூரி

முதல் ஆண்டில் ஐந்து பேர் படித்து C.Th. course முடித்தார்கள். இரண்டாவது ஆண்டில் தற்போது 25 பேர் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

### கிராம ஊழியம்

ஐந்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் நடைபெறும் சுவிசேஷ ஊழியத்திற்காக ஸ்தோத்திரம்!

கிராமங்களை சந்திக்க தேவன் வாகனம் (Van) ஒன்றினை தர வேண்டுமென்று ஜெபிப்போம்.

ஊழியக்காரர்களுக்கு வரும் இடறல்கள்

# ஒருவர் இடறினால் என் மனம் எரியாதிருக்குமோ?

➠ உண்மையும் உத்தமும் உள்ள ஊழியக்காரனுக்கு ஏற்படும் முதலாவது இடறல் **"தன்னைப் பற்றி எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணுவது"** ஏதோ தேவலோக பிறவிபோல நினைத்துக் கொண்டு ஊழியம் ஆரம்பித்த நாட்களில் தரையில் நிற்காமல் வேகமாய் பறக்க முயற்சிப்பார்கள். **ரோமர் 12:3**

➠ ஆரம்ப காலத்தில், ஊழிய பாதையில் கர்த்தருக்கு காத்திருக்க வேண்டும். அப்படியானால் புது பெலன் அடைவார்கள். பின்னர் கழுகுகளை போல் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். பிறகு ஓடுவார்கள். இறுதியாக நடப்பார்கள். இப்படிப்பட்ட ஆவிக்குரிய ஒழுங்கு இருந்தால் இளைப்படையார்கள், சோர்ந்து போகமாட்டார்கள். என்று ஏசாயா 40:31ல் நாம் வாசிக்கிறோம்.

➠ ஆனால் நம்மவர்கள் ஊழியத்திற்கு என புறப்பட்டால் முதலாவது பறப்பார்கள், பிறகு ஓடுவார்கள். பிறகு நடப்பார்கள், பிறகு நிற்பார்கள் ஒரு நாளில், ஓர் இடத்தில் உட்கார்ந்து கொள்வார்கள். மட்டுமல்ல சகட்டுமேனிக்கு எல்லாரையும் குறையும் சொல்லத் தொடங்குவார்கள். **ரோமர் 2: 1, 6**

➠ எல்லாரையும் திருடன் என்று சொல்லுபவரை உற்றுப் பாருங்கள். இவரே பெரிய திருடனாக உங்களுக்கு தெரியும்.

➠ ஆகவே ஊழியத்திற்கு வந்தவுடன் என்னுடைய **அழைப்பு என்ன?** தனது தாலந்து என்ன? தகுதி என்ன? அர்ப்பணிப்பு என்ன? தரிசனம் என்ன என்று நிதானித்து கொண்டு ஏசாயா 40:31 சொல்லுவதுபோல நடக்க தொடங்கினால் நல்லது. **இடறல்கள் இல்லை**

➠ அடுத்ததாக... 2பேதுரு 1:10

ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும், உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள், இவைகளை செய்தால் ஒருக்காலும் இடறி விழுகிறதில்லை.



➠ ஊழியக்காரர்கள் இடறிவிழாமல் இருக்க வேண்டுமென்றால் இதை சிந்தையில் பதித்துகொள்ள வேண்டும்.

➠ முதலில் எனது அழைப்பு சுவிசேஷ அழைப்புதான் என்று சொல்லி ஊர் ஊராக சுற்றத் தொடங்குவார்கள், எல்லா இடத்திலும் கெட்ட பெயர் வந்தவுடனே, என்னை ஆண்டவர் சபை ஊழியத்திற்கு அழைக்கி றார் என சொல்லி சபை ஊழியம் தொடங்குவார்கள்.

➠ அதுவும் எப்படி? ஒவ்வொரு சபையிலிருந்தும் இரண்டு விசுவாசிகளை பிரித்து.... இவர்களுக்கு பல்லக்கு செய்ய ஓர் ஆள், பல்லக்கு தூக்க ஓர் ஆள் இவரை பற்றி பெருமை பேச ஆள் என நாலு பேரை சேர்த்து சபை ஆரம்பிப்பார்கள். **இப்படி செய்யலாகாது. மத்தேயு 23:4**

ஆகவே அழைப்பில் உறுதியாய் இருந்திருந்தால் அநேகர் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

➠ ஆகவே ஐந்துவித ஊழியத்தில் எந்த ஊழியம் செய்பவராக இருந்தாலும் முதலாவது அழைப்பு என்ன? தனது தெரிந்து கொள்ளுதல் என்ன? என்பது பற்றிய உறுதி + ஜாக்கிரதை + அவைகளிலே நிலைத்து இருந்தால் ஒருகாலும் இடறி விழுகிறதில்லை. **எபேசியர் 4:13 II பேதுரு 1:10**

➠ வீட்டில் ஜெபக்கூட்டம் நடத்த தொடங்கி, பின்னர் சபையை உடைத்து, சபை தொடங்கின - வர்களால், திருச்சபைகளில் எவ்வளவு பெரிய இடறல்கள்?..

➠ சபைக்கு இயேசு கிறிஸ்து தலையாய் இருக்கிறார். அவருக்கு மணவாட்டியை உருவாக்கும் மாபெரும் பொறுப்பு உள்ளது என்பதை உணர்ந்து கொண்டால் இடறிவிழமாட்டீர்கள்.
**எபேசியர் 2:23, 5:23, கொலோசியர் 1: 18**

➠ சபை சபையாய் சுற்றும் விசுவாசிகளை போல; ஸ்தாபனம் ஸ்தாபனமாக சுற்றும் ஊழியர்களும் உண்டு. இது கொடுமையிலும் கொடுமை.

➠ இதைவிட அங்கு 200 ரூபாய் அதிகம் என்றவுடன் விலகி



அடுத்த அடுத்த ஸ்தாபனத்தில் சேரும் ஊழியனுக்கும்; அரசியல் கட்சிகளுடன் கூட்டணி மாறும் அரசியல்வாதிக்கும் என்ன வித்தியாசம்? 2 திமோத்தேயு 6:10

➠ அங்கே ஸ்கூட்டர் வாங்கி தருகிறார்கள் என்றவுடன் ஊழியர் கூட்டம் அலை அலையாக ... அலையத் தொடங்குகிறது இதை விசுவாசிகள் பார்க்கும்போது எத்தனை பெரிய இடறல் என்பது ஏனோ இவர்களுக்கு புரிவதில்லை!

➠ இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்கள் ஒரு நாளில் இடறல் அடைகிறார்கள்.

➠ எனது தேவைகள் குடும்பத்தின் தேவைகள், சபையின் தேவைகள் எதுவாயினும் முதலில், முழுங்கால்படியிட்டு முழுவதையும் கர்த்தரின் கரத்தில் அர்ப்பணித்து காத்திருக்கிறேன் என்று தனது உத்தம சாட்சியை குறித்து ஒரு ஊழியர் என்னோடு பகிர்ந்து கொண்டார். சங்கீதம் 130: 5, 6 சங்கீதம் 123: 1, 2

➠ வேலை செய்து . . . . , சம்பாதிப்பதைவிட ஊழியம் செய்து வரும் கொஞ்ச பணமே எனக்கு போதும் என்றார். "எந்த ஆசீர்வாதமாயினும் ஜெபித்தே நான் பெற்றுக் கொள்கிறேன்" என்று அவர் சொன்னபோது அவருக்காக நான் தேவனை ஸ்தோத்தரித்தேன். இப்படிப் பட்டவர்கள் ஒருகாலும் இடறல் அடைவதில்லை.

➠ யோவான் 6:6ல் இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ என்று இயேசு கேட்டார்.

➠ இயேசுவின் உபதேசம் அநேகரை இடறல் அடையச் செய்தது. சத்தியத்தை சத்தியமாக சொன்னார். அதனால்தான் சத்தியவான்கள், அவர் சத்தத்தையும் கேட்டார்கள், சத்தியத்தையும் கேட்டார்கள்.

➠ இன்றுள்ள ஊழியரின் பிரசங்கத்தில் சத்தம் இருக்கிறது. சத்தியம் இல்லையே.... இது விசுவாசிகளுக்கும், உலக ஜனங்களுக்கும் இடறல்.

➠ ஒரு ஊழியர் மூன்று நாள் சிறப்பு கூட்டம் என வைத்து ஊரெல்லாம் வழிநெடுக, ஸ்பீக்கர்களையும் கட்டினார். ஆராதனை வேளையில் இவர் அந்நிய பாஷையில் சத்தம் போட்டார். அத்தனை பேரும் ஒலிப்பெருக்கியில் அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தனர்.



➠ அந்நிய பாஷையில் இவர் தேவனோடு இரகசியங்களை பேசுவதை, ஸ்பீக்கரில் ஊரெல்லாம் கேட்டு மற்றவர்கள்... இது கடினமான உபதேசம் என இடறல் அடைந்தார்கள்.

I கொரிந்தியர் 14: 1-10

➠ சரி அந்நிய பாஷைகள் பேசலாமா வேண்டாமா? என்று கேட்டால்.... அது அவரவர் அனுபவத்தையும், ஆவிக்குரிய தகுதியையும் பொறுத்தது. அந்த ஆராய்ச்சி நமக்கு வேண்டாம். பரிசுத்தாவியானவருக்கு விரோதமான பாவம் இம்மையில் + மறுமையிலும் மன்னிக்கப் படுவதில்லை.

➠ ஆனால் ஸ்பீக்கர் வைத்து ஒரு மணி நேரமாய் கத்துவது தான் இடறல் என்றேன்.

➠ ஊழியரின் உபதேசம்...., பிரசங்கம் கேட்டு மற்றவர்கள் இடறல் அடையக் கூடாது.

➠ வெளிநாட்டுக்குப் போய் திரும்பும் நம் ஊழியர்கள் அங்குள்ள உபதேசம் ஒன்றை வழக்கமாக வாங்கி வருவார்கள்.



➠ ஊதும் உபதேசம், செழிப்பு உபதேசம், சிரிக்கும் உபதேசம்... என சொல்லிக் கொண்டே போகலாம். இதனால் வசனத்தில் தெளிவில்லாத எத்தனைபேர் இடறல் அடைகிறார்கள் என்று தெரிந்தால் இவர்களுக்கு நலமாய் இருக்கும். ஆகவே ஊழியரின் உபதேசங்கள் குறித்து எச்சரிக்கையாய் இருக்காவிட்டால் இடறல் உண்டு.

➠ மற்ற ஊழியர்களை பார்த்து காப்பி அடிக்காமல் தனித்தன்மையுடன் ஊழியம் செய்தால் நலமாய் இருக்கும்.

➠ மற்றவர்கள் கையை ஆட்டி, கண்ணை சிமிட்டினால் இவரும் அதே பாணியை பின்பற்றுவது புலியைப்பார்த்து பூனைகள் சூடுவைத்துக்கொண்டது போல இருக்கிறது.

➠ பொய்யான மாயைகளை காண்பித்து தேவ வல்லமையை இவர்கள் நிரூபிப்பதைவிட...

வசனத்தை பேசி வல்லமையை நிருபித்து காட்டினால் ஒருவரும் இடறல் அடையமாட்டார்கள்.

➠ வழியை உயர்த்தி + உயர்த்தி அதைச் செம்மைப்படுத்தி இடறல்களை என் ஜனத்தின் வழியிலிருந்து எடுத்துப் போடுங்கள்..., என்று ஏசாயா 57:14ல் நம் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

➠ இடறல்களை எடுத்துப் போடும் ஊழியத்தை ஒவ்வொரு ஊழியரும் செய்யும்போது திரள் கூட்டம் இரட்சிக்கப்படுமே.

➠ யாரோ ஒருவர்... ஜனங்களை வஞ்சிப்பதற்காக, ஏமாற்று - வதற்காக.. அமாவாசை ஜெபம் என ஆரம்பித்து இடறலைப் போட்டார். இப்போது அவரவர் பகுதியில் தொடங்கி இது பௌர்ணமி ஜெபம். பாட்டியம்மை ஜெபம், கிருத்திகை ஜெபம் வரை வளர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

➠ இந்து மார்க்கத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு வரும் ஜனத்துக்கு இவைகள் இடறலை உண்டாக்குகிறது. அமாவாசையும் வேண்டாம், பௌர்ணமியும் வேண்டாம் என்று வந்த மக்களுக்கு இவர்களே இடறல்களை போடுகிறார்கள். இப்படிப்பட்ட இடறல்களில் இருந்து விடுதலை பெறவேண்டும்.

➠ நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர் களும் இடறலற்றவர்களு - மாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன் என பிலிப்பியர் 1:11ல் பக்தனாகிய பவுல் ஜெபித்ததை கேட்கிறோம்.

➠ இடறலற்றவர்களாய் இருந்தால்தான் கிறிஸ்துவின் நாளுக்கென்று ஆயத்தமாக முடியும். ஊழியர்கள் இடறலை போடாதிருக்கவும் வேண்டும் என ஜெபித்து...., அனைவரையும் திரியேக தேவனின் நாமத்தில் ஆசீர்வதிக்கிறேன்.





## ஊழியக்காரர்களின் நிலை

தென் இந்தியாவில் குறிப்பாக தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் கிறிஸ்தவ போதகர்களும், நல்ல தரமான சபைகளும் உண்டு.

அதிலும் இந்தக் கொடிய கடைசி காலத்தில் அந்திக் கிறிஸ்துவின் ஊழியக்காரர் யார்? இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரர் யார்? என்று கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கும்.

வேத புத்தகம் எடுத்தவர், எல்லாம் விசுவாசிகள், வசனம் தெரிந்தவர்கள் எல்லாம் போதகர்கள், ஜெபிக்க தெரிந்தவர் எல்லாம் சுவிசேஷகர், குறி சொல்ல தெரிந்தவர் எல்லாம் தீர்க்கதரிசிகள் என்று கோதுமை மணிகளுக்குள் களைகள் வேருன்றி வளர்ந்து விட்டது.

உண்மை ஊழியனை எப்படி அடையாளம் கண்டுபிடிப்பது?

முதலில் சொல்லும் முக்கியமான குறிப்பு ...., ஒரு ஊழியக்காரனின் குணத்தை, நடத்தையை கவனிக்க வேண்டும்.

அவரிடம் காணப்படும், கனிகளை வைத்து தான் எடை போட வேண்டும். கனிகளினாலேயே மரங்களை அறிவீர்கள் என்று இயேசு கிறிஸ்துவே சொன்னார்.

நெரிஞ்சல் செடிகளில் (முட்செடிகளில்) அத்திப்பழத்தை பார்க்கவே முடியாது. அவர்களின் நடத்தையை, ஜீவியத்தை, வாழ்க்கை முறையை வைத்து அவர் தேவ ஊழியர் தானா என்று முடிவு செய்ய வேண்டும்.

பார்ப்பதற்கு சாதுவாக இருக்கலாம் அயினும் அவரை சாதாரணமாக முடிவு செய்யாமல், தொடர்ச்சியான அவரது சாட்சியை உற்று நோக்குங்கள்.

பரிசுத்தாவியானவர் வந்தால் சாட்சியாய் இருப்பீர்கள் என்று தானே இயேசு கிறிஸ்து முதன் முதலில் சத்தியத்தை சொன்னார்.

பரிசுத்தஆவி பெற்ற ஊழியரிடம் சாட்சி இல்லாவிட்டால் அவர் சத்தம் இடும் வெண்கலமுமாய்; ஓசையிடும் கைத்தாளமுமாய் தான் இருப்பார். வரங்கள் இல்லாமல் பரத்திற்கு ஏறிச் செல்ல முடியும். ஆனால் கனிகள் இல்லாமல் பரலோகத்திற்கு செல்ல முடியாது. நீங்கள் பேய் ஓட்டுவதைவிட, தீர்க்க தரிசனம் சொல்வதை விட, நோய்களை சுகமாக்குவதை விட, கிறிஸ்துவின் சுபாவங்களை பெற்று அவர் சித்தம் செய்வது தான் அவரது விருப்பம். வரங்கள் ஊழியத்தை வளர்க்குமே தவிர அது ஒன்றே வழியாக இருக்க முடியாது.

வரங்கள் உண்டு. அவைகள் ஊழியத்துக்கு அஸ்தி பாரம் தான். இது ஒரு பகுதி உண்மை.

ஆனால் மறுபகுதி குணப்பட வேண்டும். குணப்படுத்தப்பட வேண்டும். ஜென்ம சுபாவங்கள் மாற்றப்பட வேண்டும். நாளுக்கு நாள் ஊழியக்காரனின் வாழ்வு மறுரூபமாயிருக்கிறதை மக்கள் கண்டு தேவனை துதிக்க வேண்டும்.

ஊழியத்தை ஆரம்பிக்கும் போது அதிக பிரதிஸ்டையோடு, பாடுகளோடு, ஜெபத்தோடு, தீர்மானங்களோடு ஆரம்பிப்பார்கள்.

கொஞ்சம் தேவன் உயர்த்தும் போது ஒன்று ஊழியத்தை ஸ்தாபனமாக மாற்றுவார்கள் இல்லையெனில் ஏதேனும் ஒரு ஸ்தாபனத்திற்கு விற்று விடுவார்கள். ஊழியங்கள் இன்று (Trust). ஆகவே அறக்கட்டளைகளாக இருக்கிறது Societyக்கு மாறியவுடன் அவைகள் இருந்த ஆவியின் அனல் போய் அவைகள் அந்நிய அக்கினியினால் நிறைந்து விடுகிறது.

நாங்கள் ஏதேனும் ஒரு ஊழியத்தோடு இணைந்து செய்வது தானே வேதத்தின் ஒழுங்கு. எப்படி யாரோடும் ஐக்கியம் இல்லாமல் ஊழியம் செய்வது என்று நீங்கள் கேட்கலாம்?

சுவிசேஷகரும், போதகரும், தீர்க்கதரிசிகளும் ஒரு சபையில் இணைந்து ஊழியம் செய்ய வேண்டும். இது வேதத்தின் மாறாத சட்டம். உண்மைதான். ஆனால் இந்தியாவில் இந்த மூன்று வகையான ஊழியரும் செய்வது என்ன? பாரம்பரிய சபைகளில் தங்களுக்கு பேச வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்று அதிலே உறுப்பினர் ஆகி விடுவது. அங்கு சென்றால் அதற்கேற்ற பாட்டு, அதற்கேற்ற மெருகு ஊட்டப்பட்ட பிரசங்கம்.

ஆவி பெற்ற சபைகளுக்கு வந்தால் எழுப்புதல் கீதங்கள், எரியும் பிரசங்கம். இடத்திற்கு இடம் தகுந்தாற்போல் மாறி விடுவார்கள். சபையோடு இணைந்து செய்ய வேண்டிய இவ்வகை ஊழியங்கள் தடைபடுகின்றன.

எந்த சபையையும் நாங்கள் சாராமல், எல்லோருடனும் ஐக்கியமாய் இருப்போம். எங்களுக்கு தேவை சந்தாதாரர்கள், எங்கள் ஜெபத்துக்கு ஏற்ற காணிக்கைகள், போதுமே! அது போதுமே! இதுவே இவர்களது இதயத்தின் குரல்.

ஊழியம் ஆரம்பித்ததும் கிறிஸ்துவிடம் ஆட்களை சேர்க்காமல் தன்னை ஒரு பெரிய சக்தியாக காண்பித்து; தன்னை சுற்றி ஒரு கூட்டத்தை கூட்டிவிட வேண்டும்.

கும்பல் கூடிவிட்டால் அவர் முதல்தரமான ஊழியர். அவர் சொல்வதெல்லாம் தேவ வெளிப்பாடு. அவரை பின்பற்ற கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட ஊழியர் விழுந்து போனால் விசுவாசிகளும் விழுந்து பொகிறார்கள்.

இன்றைய சுவிசேஷகர்கள் கூட்டத்தின் முன் பகுதிக்கு வரும் மக்களை புகைப்படம் எடுப்பதோடு முடிந்துவிட்டதாக கருதி விடுவதால் ஜனங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வேரூன்றி வளராமல் சீக்கிரத்தில் கருகிவிடுகிறார்கள்.

இது ஒரு விளம்பர யுகம் தான். ஒத்துக் கொள்கிறோம். ஆனால் விளம்பரங்களிலேயே ஊழியம் வளர்க்க ஆசைப்பட்டால் அது ஒரு தலைமுறையுடன் முடிந்து போகும் ஊழியமே!

சபையில் இணைய வேண்டிய சுவிசேஷகர், தீர்க்கதரிசிகள், போதகர்கள் நிரந்தர வருமானம் வேண்டுமே என்று சபை தொடங்க ஆரம்பிப்பது ஆபத்தான ஒன்றில் முடியும்.

மேய்ப்பர்கள் சபையை கட்டிக் காத்து. விசுவாசிகளை சத்தியத்தில் மேய்க்க வேண்டும்.

புத்தகத்தை படித்து விட்டு நீங்கள் பிரசங்கித்தால் ஜீவ புத்தகத்தில் உங்கள் பெயர் இருக்குமா?

யாரோ சொன்னதைக் கேட்டு. மற்றவர்களது செய்தி உங்களது செய்தியை போல் பிரசங்கித்தால் அதில் ஆவியானவரின் கிரியை இருக்காது. நீங்கள் செய்தியை கொடுக்கும்போது ஜனங்கள் தூங்கி வழிகிறார்களே ஏன்? கோளாறு உங்களிடம்தான் இதைவிட்டு விட்டு விசுவாசிகளை குறை சொல்வதில் அர்த்தமில்லை.

உங்களுக்கு தனிப்பட்ட முறையில் தேவன் கொடுத்த வெளிப்பாடு களை பேசுங்கள். மற்றவர்களது கருத்துக்களை எடுத்து சொல்லலாம். தவறு இல்லை. ஆனால் உங்களுக்கு தேவனின் செய்தி பரத்திலிருந்து கொடுக்கப்படாவிட்டால் ..., தனித்து இருந்து மௌனமாய் இருப்பதே மேல்.

ஒவ்வொரு விசுவாசிக்-காகவும், தனிப்பட்டமுறையில் ஒரு மேய்ப்பன் தனது தனி ஜெபத்தில் ஜெபிக்க வேண்டும். விசுவாசிகளுக்காக ஜெபிக்காமல், அவர்களது காரியங்களில் பாரப்படாமல் இருக்கும் மேய்ப்பன். பிரதான மேய்ப்பனைக் (இயேசுவைக் காணவே முடியாது.

## ஊழியக்காரர்களுக்கு கூட்டம் நடத்தும் ஊழியக்காரர்கள்



கடந்த சில ஆண்டுகளாக நம் கிறிஸ்தவ உலகில் நடந்த ஆசீர்வாதமான காரியம் "ஊழியக்காரர்களுக்குள் உண்டாகும் ஒரு ஐக்கியம் ஆகும்.

வழக்கம் போல் பாரம்பரிய சபைகளின் ஊழியர்களுக்குள் ஐக்கியம் இருப்பது உண்டு. ஒருசில நேரங்களில் அவர்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒரு பிரச்சினை என்று வரும்போது அனைவரும் ஓர் அணியில் திரள்கிறார்கள்.

சுயாதீனமாக ஊழியம் செய்யும் ஊழியர்களுக்குத் தான் ... எதற்கும் கட்டுப்பட அவசியமில்லை என்ற நிலை இருந்தது. அவர்களும் இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால், மற்ற மதப்பிரிவினர் தந்த கொடுமையினால் ஒரு ஐக்கியத்திற்குள் இருந்தால் நல்லது என கருதினர்.

ஆகவே இப்பொழுது அந்தந்த இடங்களில் இருக்கும் சுயாதீன, ஸ்தாபன ஊழியர்களுக்குள் ஒரு ஐக்கியம் ஏற்படுத்தப்படுகிறது அவர்கள் மாதம் ஒருமுறை ஒரு இடத்தில் கூடிவர தொடங்கிஉள்ளனர்

மூத்த போதகர்கள் தலைவராக செயலாளராக, பொருளாளராக நியமிக்கப்பட்டார்கள். ஐக்கியங்களுக்கு அந்தந்த வட்டார பெயர்களை சூட்டினார்கள்

இது கால ஓட்டத்தில் கரைந்து இப்போது ஆங்காங்கே ஆளுக்கு ஆள் தொடங்கும் நிலைக்கு வந்துவிட்டது. அங்கும் அரசியல் போல நிலைமை மாறிவிட்டது.

போட்டி போட்டு தொடங்கினவர்கள் போன வேகத்திலேயே திரும்பி வந்துவிட்டனர். ஏன் இப்படி?

ஆரம்ப நாட்களில் கிராம ஊழியர்களுக்கு, ஏழ்மையில் இருப்பவர்களுக்கு சைக்கிள் தருகிறோம். பெட்ரோமாக்ஸ் தருகிறோம் என்று அழைத்து அவர்களை ஆசைகாட்டி வரவழைக்கப்பட்டார்கள் இறுதியில் சரிவர தர இயலாமல் போனதால் அது ஆபத்தாக முடிந்தது.



பிறகு இருவழி பிரயாணச் செலவு, மதிய உணவு தருகிறோம் என்று கூப்பிட்டது. அதைவிட கொடுமையானது. சில விஷயங்களை வெளிப்படையாக பேசி பின்னர் அதை செய்யாமல் போனால் மனதுக்கு சங்கடமாக முடிகிறது.

எப்போதெல்லாம் வெளிநாட்டு மிஷினெரிகள் வருகிறார்களோ அப்போது இதுபோல அவசரக் கூட்டம் கூட்டி கும்பலை காட்ட வேண்டும் என்பதற்காக குறுக்கு வழியில் செய்த முயற்சிகளால் வளர்ந்துவரும் இளம் சிறுசிறு ஊழியர்கள் மனம் நொந்து போனார்கள். உள்ளம் சோர்ந்து போனார்கள்

காலமெல்லாம் கணக்கு போட்டு, கணக்குபோட்டு ஊழியம் செய்தவர்களின் ஊழியத்தையும் ஜீவியத்தையும் கடைசியில் கணக்கு போட்டு பார்த்தால் பலன் சைபர்தான் வருகிறது.

அங்கு போன, இடத்தில் ஊழியக்காரர் ஐக்கிய கூட்டம் என்பார்கள். தேடினாலும் **ஐக்கியம்** இருக்காது. மாறாக... பெரிய ஊழியர்கள் சின்னவர்களை மதிப்பது இல்லை. ஆகவே சிறிய ஊழியக்காரர் எந்த பெரிய ஊழியரையும் மதிப்பது இல்லை. அவரவர் தானுண்டு தன் வழி உண்டு என அவர்கள் எல்லைக்குள் அவர்களை பெரிய ஆட்களாக நினைத்து கொண்டு இருக்கிறார்கள்.

எப்படியாவது தன்னுடைய பெயர் பிரஸ்தாபத்தை நிலைநாட்டி அவரை பெரிய ஆளாக காட்ட முயற்சிப்பதால் சீக்கிரமாய் விழுந்து போகிறார்கள். "சுயம் என்னில் சாம்பலாய் மாற சுத்தாவியே அனல் மூட்டும்" என்று அவர்கள் பாடும் பாடல் மெய்பொருளாய் மாறினால் எத்தனை நலமாய் இருக்கும்.

**இதுபோல ஊழியக்காரர்களின் ஐக்கிய கூட்டத்தில் என்ன செய்யலாம்?**

ஒவ்வொரு ஊழியர்களின் தனிப்பட்ட சபை பிரச்சனை என்ன என்று கேட்டு விசாரிக்கும் சாட்சியின் நேரம் வைக்கலாம்.



திருமணத்திற்கு காத்திருக்கும் ஆண், பெண் பிள்ளைகளின் விபரங்களை பகிர்ந்து மற்ற சபை மேய்ப்பர்களிடம் தெரியப்படுத்தலாம்.

சபைகளை அரசாங்கத்தில் பதிவு செய்ய, அரசு அலுவலகங்களில் இருக்கும் பணிகளை வளர்ந்து வரும் ஊழியர்களுக்கு விவரமாய் சொல்லி மற்ற ஊழியங்களையும் கட்டுகோப்பாக வளர உதவி செய்யலாம். அப்படி இருக்கும்போது சபையை எந்த பாதாளத்தின் வாசல்களும் மேற்கொள்ளவே முடியாது.

கல்லறை தோட்டத்திற்கடுத்த சில விபரங்கள், அது பற்றிய அரசாங்க நடைமுறை சட்ட திட்டங்கள் ஒவ்வொரு சபை மேய்ப்பனுக்கும் தெரிந்திருந்தால் அதை குறித்தும் சொல்லி கொடுக்கலாம்.

குழந்தை பிரதிஷ்டை சர்டிபிகேட், ஞானஸ்நான சர்டிபிகேட், நிச்சயதார்த்த சர்டிபிகேட் வரை, ஊழியர் கூட்டத்தில் அதன் மாடல்களையாவது தந்து உதவினால் கலந்துகொள்ளுபவர்களுக்கு பேருதவியாக இருக்கும்.



ஒவ்வொரு சபைகளிலும் முரட்டு ஆடுகள் உண்டு. அயலகத்தாரால், சுற்று புறத்தாரால் வரும் போராட்டங்களை விசாரித்து எப்படி அதை சமாளிக்க வேண்டும் என்கிற அனுபவத்தில் முதிர்ச்சி பெற்ற தேவ ஊழியர்கள் ஆவிக்குரிய யுத்த முறைகளை சொல்லிக் கொடுக்கலாம்.

பொதுவாக தேவ ஊழியர்களும் சில நேரங்களில் மனதிற்குள் ஆறுதல் இல்லாமல்; சமாதானம் இல்லாமல்; மனக்காயங்களுடன் இருப்பார்கள். சரியான ஜெப ஐக்கியம் இல்லாமல் இருப்பார்கள். சேர்ந்து ஜெபித்து தேவனின் நித்திய நல் ஆறுதல்களைப் பெற்றுக் கொள்ளளும் படியாக அவர்களை வழிநடத்த வேண்டும்.

திருமணம், மரணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஆராதனை முறைமைகளை சொல்லித்தந்து பயிற்சி அளிக்கலாம். நிர்வாக ஒழுங்குகளை கற்றுத்தரலாம்.

இன்னும் எத்தனையோ காரியங்களை எழுதிக்கொண்டே போகலாம். ஆனாலும் ஒருவர் ஆயிரம் பேரையும் இருவர் பதினாயிரம் பேரையும் துரத்துவார்கள் என்று வேதம் சொல்கிறது.

இதே கணக்கில் ஏழுபேர் சேர்ந்தால் நூறுகோடி இந்தியர்களையும் இயேசுவுக்குள் கொண்டுவரமுடியும் என்று போதகர் ஒருவர் சொல்லக் கேட்டேன். நம் தேசத்தில் எங்கேயாவது ஏழு ஊழியக்காரர்கள் சேர்ந்து ஒருமனப்பட்டு கூட்டம் நடத்தினால் எனக்கும் சொல்லி அனுப்புங்கள். நானும் போய் சேர்ந்து கொள்ள ஆசையாய் இருக்கிறேன்.



## மகிமையின் தேவாலயம்

**ஆராதனை நேரம் :** ஞாயிறு காலை 6-30 மணிமுதல் 9-00 மணிவரை முதலாவது ஆராதனை 9-30 முதல் 11-30 வரை இரண்டாவது ஆராதனையும் நடக்கிறது.

**உபவாச ஜெபக் கூட்டம் :** வெள்ளிக்கிழமை காலை 10-00 முதல் 12-00 வரை நடைபெறுகிறது.

**வேதபாட வகுப்பு :** பிரதி செவ்வாய், வியாழன் மாலை 6-00 மணிக்குமேல் 7-30 மணிவரை நடைபெறுகிறது.

## ELEVENTH HOUR MINISTRIES

1993 to 2025

பதிவு : அறமத நிறுவனம்
12 A License

மகிமையின் தேவாலயம்
Glorious Church — 5 இடங்களில்

சிறுவர் ஊழியம்
Children for Christ — 10 இடங்களில்

குளோரி வேதாகம கல்லூரி
Glory Bible College — 20 மாணவர்கள்

குளோரி திருமண தகவல் மையம்
Glory Marriage Bureau அநேக திருமணங்கள்

மருத்துவமனை ஊழியங்கள்
Deliverance Clinic — 3 மருத்துவமனைகளில்

ஒலி, ஒளி நாடா ஊழியம்
Audio & Video Ministries — 4 கேசட்டுகள்

இலக்கிய ஊழியம்
Eleventh Hour Publication — 5 புத்தகங்கள்

கிராம ஊழியம்
Village Ministries — 5 கிராமங்களில்

# இரண்டாம் நிலை தலைவர்களை நாமேஏற்படுத்த இயலுமா?

சில தினங்களுக்கு முன்பு என்னை ஒரு சகோதரன் சந்தித்தார். அப்போது அவர் பேசிய கருத்துக்களுக்கு எதிர் விளைவே என்னை இந்தசெய்தி எழுதும்படி தூண்டியது.

இன்றைய ஆவிக்குரிய கிறிஸ்தவ உலகில் ஒரு சிலர் கர்த்தருக்காக வைராக்கியமாக எழும்பி ஊழியத்தை தொடங்குகிறார்கள். நாளடைவில் ஊழியம் வளர்ந்து கனி கொடுக்க ஆரம்பிக்கிறது.

முடிவில் அவர் மரித்த பிறகு அல்லது அவருக்குப் பிறகு அதே ஆத்தும பாரத்துடன் ஊழியத்தை கட்டி எழுப்பும் இரண்டாம் நிலைத் தலைவர்கள் இல்லாத தால் அந்த ஊழியம் அப்படியே நின்று விடுகிறது. இல்லையெனில் துண்டுதுண்டாக உடைந்து போகிறது.

பல ஆண்டுகளுக்கு முன் இடி முழக்கம் போன்ற கர்ஜனையுடன் தொடங்கப்பட்ட ஒரு ஊழியம் கொஞ்ச நாட்களுக்குள் மகிமையாய் வளர்ந்த பெருகிற்று சுவிசேஷகராய் தொடங்கி, போதகராய் மாறி, மேய்ப்பனாக இருந்து சென்னை பட்டிணத்தைக் அந்த தேவ ஊழியர் கலக்கினார்.

எதிர்பாராத நிலையில் அவர் மரித்த பிறகு அவரைப் போன்ற இரண்டாம் நிலைத் தலைவர்கள் எழும்பி அந்த ஊழியம் சிதறாதபடி கட்டி எழுப்ப இயலாமல் போனது.

வேதத்தில் மோசேயைப் பார்த்து கர்த்தர்: "உன் கனத்தில் யோசுவாவுக்கு கொஞ்சம் கொடு" என்கிறார்.

அப்படியானால் ஆரம்ப நாட்களிலேயே ஒருவரை கிறிஸ்துவுக்குள், ஊழியப் பாதையில் வளர்க்கும் போது மூத்த தலைவர்கள் அடுத்த இளைய தலைமுறைக்கு கனத்தை கொடுத்து உற்சாகப்படுத்த வேண்டும்.

ஆனால் இங்கே தான் பிரச்சனை தொடங்குகிறது. எங்கே நமது கனத்தை அடுத்தவர் களுக்குத் தந்தால் நமது மதிப்பு குறைந்து விடுமோ என பயந்து; அடுத்தவரை மட்டம் தட்டியே, கனவீனப்படுத்தி அடிமை மாதிரியே மூத்த தலைவர்கள் நடத்துகிறார்கள்

சவுலுக்கு தாவீதின்மேல் பயம் வந்தது போல தனக்கு அடுத்த தலைவன் எழும்புவதை எந்த எந்த வழிகளில் தடுக்க முடியுமோ அத்தனை வழிகளையும் இவர்களே உருவாக்குவார்கள்.

இவர்களது பொறாமையின் விளைவாக..., அடுத்த தலைவனாக உருவாக்கப்படுபவன் மேல் பொய்யான குற்றச்சாட்டுகளையும், கசப்பான வார்த்தைகளையும் பேசி அவன் தலையெடுக்க முடியாதபடி தடுக்கப்பார்ப்பார்கள்.

அடுத்ததாக...., முதல் நிலைத் தலைவர்கள் தங்கள் பிள்ளைகளையே இரண்டாம் நிலைத் தலைவர்களாக உருவாக்க முயற்சிப்பது தவறு அல்ல. ஆனால் இதில் தேவனால் அங்கீகரிக்கப்படுவதும், மனிதர்களால் அங்கீகரிக்கப் படுவதும் அவசியமாக இருக்கிறது.

அப்பாவின் சொத்து பிள்ளைகளுக்கு, ராஜாவிற்கு பிறகு இளவரசருக்கு; என்று குடும்ப சொத்தாக மாற்றுவதாலும் பிரச்சனைகள் வருகிறது. வாரிசு அடுத்ததாக யார்? பிள்ளை தானா?

இவரை சபையின் அடுத்த பாஸ்டராக ஜனங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமே! தேவனோடு சமாதானமாய் இருந்துவிட முடியும். ஆனால் பல தரப்பட்ட இந்த மனிதர்களோடு சமாதானத்தைக் காத்துக் கொள்ள மிகப்பெரிய கிருபை தேவை.

இதற்கு என்ன செய்யலாம்? அடுத்த தலைமுறைக்கு...., பொறுப்புகளை சொல்லிக் கொடுத்து வளர்க்கணும், அதற்கான தியாகம், கிரயம், பாடுகளை புரிய வைக்கணும். மட்டுமல்ல..., பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டும். ஏற்றுக் கொண்ட பொறுப்புகளுக்கு தரிசனத்திற்கு உத்தரவாதத்துடன் உண்மையாய் இறுதிவரை உழைக்க கற்றுக்கொடுக்க வேண்டும்.

இப்படிப்பட்ட நடைமுறை பழக்கங்களால் இரண்டாம் நிலைத் தலைமுறையை உருவாக்குவது சாத்தியமாகும்.

இன்றைய நிலையில் பெரிய ஆவிக்குரிய சபைகளிலும் தலைமைப் போதகருக்கு அடுத்ததாக வருபவர் யார் என உள்நாட்டுப் போர் நடந்து கொண்டு இருக்கின்றது.

பாரம்பரிய சபைகள் ஸ்தாபனமாக இயங்குவதால் (Society Act) அதில் அனைத்தையும் கண்காணிக்க குழுக்கள் இருக்கும். தனி ஒருவர் எதையும் தீர்மானிக்க இயலாது.

ஆவிக்குரிய வட்டாரத்தில் எந்த ஊழியமானாலும், சபையானாலும் குடும்ப சொத்தாக (Trust) இருப்பதால் ஜனநாயக முறைகள் தோற்றுப்போய் சர்வாதிகாரமே தலைதூக்கி நிற்கிறது.

உதாரணமாக அயல்நாடுகளில் உள்ள சபைகளில் இருப்பதே பத்துபேர்..., ஆனால் இதில் ஏழுபேருக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இவர் தலைவர், அவர் பொருளாளர், இன்னொருவர் செயலாளர், மற்றவர்கள் எல்லாம் மூப்பர்கள் என்று இருக்கும் போது எல்லாக் காரியமும் தடைபட்டு நிற்கும். இதற்கு காரணம் ஆளுக்கு ஒரு கருத்தை சொல்லுவார்கள்

இரண்டாம் நிலைத் தலைவர்களாக வர விரும்புகிறவர்களுக்கு இரட்டை தரிசனம் இருக்கக்கூடாது. முதல்நிலை ஊழியரின் அர்ப்பணிப்பைவிட அதிகம் இருக்கும்படி நடக்கனும்.

ஒரு பிரச்சனையில் ஒருமித்த கருத்து உருவாகுவது என்றால்...., அது மிக மிகக் கடினம். அதிலும் இப்போதுள்ள கலாச்சாரப் பின்னணியில் ஒருமனம், ஒற்றுமை, ஏக சிந்தை என்று நடைமுறை படுத்தினால் நலமாக இருக்கும்.

**தலைமைத்துவம் என்பது சேவை செய்வதற்கான ஒரு வாய்ப்பு மற்றர்களுக்கு பணிவிடை செய்ய ஒரு தருணம் என்ற நிலையில் இருந்தால் அநேகர் தலைமைத்துவத்திற்கு ஆசைப்படவே மாட்டார்கள்.**

ஒரு ஊழியத்தில் இறங்கி வேலை செய்கிறவர்கள், உழைக்கிறவர்கள், அதில் தன்னை ஏதாகிலும் ஒரு பகுதியில் ஈடுபடுத்திக் கொள்கிறவர்கள் தங்கள் கருத்தை தெரிவிக்கலாம்.

ஆனால் ஊழியத்தில் எந்தவித பங்கும் கொள்ளாதவர் கள், அதை குறித்து விமர்சிக்க தொடங்கினால் அதுதான் அனைத்து பிரச்சனைக்கும் காரணமாகும்.

உதாரணமாக கிரிக்கெட் விளையாட்டை எடுத்துக் கொண்டால், விளையாடுபவர் வேறு; வேடிக்கை பார்க்கிறவர்கள் வேறு. வேடிக்கை பார்க்கிறவர்கள் ஆளுக்கு ஒரு கருத்தை சொல்லுவார்கள். ஆனால் இவர்களை மைதானத்தில் இறங்கி விளையாடச் சொன்னால், ஐயோ!..., நான் மாட்டேன்; அந்த பந்து வரும் வேகத்திற்கு என்னால் விளையாட முடியாது என்பார்கள்.



அதுபோல ஊழியத்தில் பங்கு கொள்கிறவர்கள் வேறு: பார்வையாளர்கள் வேறு; சும்மா வேடிக்கை பார்ப்பது போல பார்த்துக் கொண்டு இருப்பவர்களின் விமர்சனங்களுக்கு எல்லாம் பதில் சொல்லிக் கொண்டு இருந்தால் காலங்கள்தான் வீணாகும்.

நடைமுறை வேறு (Practical); ஏட்டளவில் எழுத்துக்களாய் இருப்பது (Theoritical) வேறு .., சிலர் எல்லாவற்றையும் ஏட்டளவிலே பேசுவார்கள். அவர்களுக்கு நடைமுறை என்பது புரியவே வாய்ப்பில்லை.

இயேசுவின் அப்போஸ்தலர்களில்; யூதாஸ் இடத்தை இழந்த பிறகு அவருடைய இடத்திற்கு மற்றவர்கள் சீட்டுப் போட்டு மத்தியாஸ் என்பவரை தேர்ந்தெடுத்தார்கள்.


ஆனால் அவரைப் பற்றி அந்த இடத்தை தவிர வேறு எங்குமே நாம் பார்ப்பது இல்லை. பக்தனாகிய பவுல் தேவனால் உருவாக்கப்பட்ட அப்போஸ்தலன். அவர் செய்த ஊழியம், எழுதிய நிருபங்களும், புறஜாதிகளுக்கு அப்போஸ்தலராக அவரைக் காண்பிக்கிறதே.

அப்போஸ்தலர் 9:15, I கொரிந்தியர் 15:9

மனிதனின் தெரிந்து கொள்ளுதல் வேறு: தேவனின் தெரிந்து கொள்ளுதல் வேறு. இரண்டு பகுதிகளிலும் ஒன்றாக இராதபோது தேவனின் சித்தம். திட்டம் நிறைவேற்றப்பட முடியாமல் போகிறது.

தாவீதுக்குப் பிறகு அப்சலோம் அடுத்த ராஜாவாக வர இருந்தவர். ஆனால் அடுத்த ராஜாவாக சாலமோன் வந்தது தேவ திட்டமாக இருந்தது.

ஊழியப்பாதைகளில் இத்தனை ஆண்டுகள் இவ்வளவு ஊழியங்கள் இருந்தும்.., இன்னும் கடைகோடியில் உள்ள இந்தியனுக்கும் சத்தியம் சொல்லாததற்கு இதுவும் ஒரு காரணம். இரண்டாம் நிலைத்தலைவர்களை உருவாக்குவது இன்றைய கிறிஸ்தவ உலகின் அடிப்படைத் தேவை.





## பரதேசியின் புலம்பல்

ஐயோ! நான் என்ன செய்வேன்? எப்படி என் கவலையை உங்களுக்கு புரிய வைப்பேன்? எனது குறையைக் கேட்க யாருமே இல்லையா. ஏன் இல்லை?

என்னை இரட்சித்த இயேசு இருக்கிறார். அது போதுமே! ஆண்டவரே! இயேசு அப்பா! இந்த பிரச்சினைக்கு நீர் ஒரு பதிலை தாருமே!

கடைசி நாட்களில் மாமிசமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்றீரே... அதனால் அநேகர் இயேசுவே உம்மை ஏற்றுக் கொண்டு ஆவிக்குரிய சபைகளுக்கு செல்லுகிறார்கள் அங்கே சென்ற பிறகு எதற்கும் அத்தாட்சியாக சர்டிபிகேட் கேட்டால் கிடைக்கவில்லை. அதுதான் என் புலம்பலுக்கு மூல காரணம்.

உனக்கு எதுக்கு சர்டிபிகேட் என்கிறீரா? நான் இரட்சிக்கப்பட்டதற்கு கேட்கவில்லை. அதுக்கு தேவன்தான் தரணும். எனக்குள் இருக்கிற ஆவிதான் அத்தாட்சியா-யிருக்கணும். ஆனால் நான்



எதுக்கு கேட்கிறேன் என்றால் ஞானஸ்நானம் எடுத்தால் நிச்சயதார்த்தம் முடிந்தால் குழந்தைக்கு பெயர் வைத்தால்; மரித்து போனால் இதுக்கு எல்லாம் எனக்கு சர்டிபிகேட் தேவைப்படுகிறது.

அரசாங்கத்துக்கோ, ஒரு ஆதாரத்துக்கோ கேட்டால்... ஏதாவது லெட்டர் பேட் பேப்பரில் எழுதி தருகிறார்கள்.

இதை நான் என்னான்னு சொல்லுவேன்? கிராமத்தில், வசதியில்லாத சின்ன சின்ன சபைகளுக்கும் பொருந்துகின்ற விதத்தில் ஒரு பொதுவான மாடலில் இது மாதிரியான சர்டிபிகேட் அச்சடித்து விற்றால்... எல்லா சபை பாஸ்டரும் வாங்கி வைத்து, அவரவர் பெயர்களை எழுதி, ரப்பர் ஸ்டாம்பு போட்டு கொடுத்தால் ஆசீர்வாதமாக இருக்குமே! சபைகளில் சர்டிபிகேட் பிரச்னையும் தீரும்

பாரம்பரிய சபைகளில் பொதுவாக இருப்பது போல், எல்லா பூரண சுவிசேஷ சபைக்கும் பொது வான முறைமை இருந்தால், புதிதாக இரட்சிக்கப்பட்ட வர்கள் காப்பாற்றப்படுவார்களே!

பெரிய பெரிய சபைத் தலைவர்கள் என்று இருக்கிற ஊழியர்கள் ஒன்றுகூடி இதற்கு ஒரு முடிவு எடுக்கலாமே.

ஆனால் நான் என்ன விசுவாசிக்கிறேன். என் தேவனால் எல்லாம் கூடும்! இப்படி ஒரு அற்புதம் நடந்து, பொதுவான சர்டிபிகேட முறை ஆவிக்குரிய சபைகளுக்கும் வந்தால்.... எத்தனை நலமாய் இருக்கும். எனக்கு பெருமூச்சி தான் வருகிறது. புலம்பல் யாரை எழுப்பப் போவுதோ தெரியவில்லையே! எப்படியோ பொழுது விடிஞ்சா சரி! சர்டிபிகேட் கிடைத்தால் சந்தோஷம். அல்லேலூயா!

### பினாகாஸ் எக்காளம் ஊதுகிறார்

தேவ செய்தி தந்து கொண்டிருந்தார் ஒரு ஊழியர் அவ்வப்போது அவர் ஆவியில் அனல் கொண்டவரைப்போல் எச்சரித்துப் பேசினார்.

திடீரென செய்தியின் நடுவில் தாவீது இருக்கிறானே, அவன் ஒரு பாவி ! சிம்சோனோ விபச்சாரக்காரன் பேதுரு பின் மாற்றக்காரன் ! ஆபிரகாமும் மாய்மாலக்காரன்; ஏன் தன் மனைவியை சகோதரி என பொய் சொன்னான்?

. . . என்று சரமாரியாக குற்றச் சாட்டுகளை அள்ளி வீசினார். ஏதோ எதிரியை திட்டுவது போல திட்டினார்.

வேதத்தில் உள்ள எந்த காதாப்பாத்திரங்களையும் மரியாதைக் குறைவாக, கண்ணியம் இல்லாமல் திட்டுவது சரியல்ல, பழைய ஏற்பாடு பரிசுத்தவான்-களையும் சரி

புதியஏற்பாடு பரிசுத்தவான்-களையும் அவன் இவன் என்று பேசுவது சரியல்ல, ஒவ்வொரு பிரசங்கியாரிடமும் நினைப்-பூட்டுங்கள், பவுல் யோவான், ஸ்நானகன், தீமோத்தேயு, சொல்கிறார்கள் என்றால் நன்றாய் இருக்கும்.

பவுல் சொல்கிறான் என்று ஒருமையில் பேசினால் அழகல்ல.. ஆகவே வழக்கம் போல் ஊதுகிற சங்கை ஊதுகிறேன்.

---

கிறிஸ்தவ உலகில் நூற்றுக்-கணக்கான மாதப்பத்திரிக்கை வெளிவருகிறது. அதில் அதிகமானவை அவரவர் சொந்த சுய புகழைப் பாடுவதாகவே அமைகிறது. இதில் ஆச்சர்யம்... யாரும் கேட்காமலேயே பல பத்திரிக்கைகள் உங்கள் வீடு தேடி வரும். விசுவாசி வீடுகளில் அநேக பத்திரிக்கைகள் அட்டையின் கவர் கூட பிரிக்காமலேயே கிடக்கிறது. அதில் ஒன்றை பிரித்து படித்தபோது நான் அதிர்ச்சி அடைந்தேன். பத்திரிக்கை உங்களுக்கு ஆடுகளாய் அனுப்புகிறோம் ஏன் சந்தா அனுப்பவில்லை என்ற தோரணையில் அதட்டி இருந்தார்கள். இவர்களோ பத்திரிக்கை அனுப்பாமல் இருப்பதே சிறந்தது.

ஏன் நீங்களாகவே அனுப்பிவிட்டு பிறகு சந்தாவுக்காக அவர்களை குறை சொல்வானேன்? வழக்கம் போல் ஊதுகிற எக்காளத்தை ஊதிவிட்டேன்.


மகிமையின் தேவாலயம்
நீங்களே அந்த ஆலயம்
நீங்களே தேவனுடைய ஆலயம்..
YOU ARE THE TEMPLE OF GOD.,
கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவரே உள்ளே வாரும்...!
CHURCHES
BIBLE COLLEGE
MARRIAGE REGISTAR
....Come , You Who are Blessed
By the LORD...! - Genesis 24:31
...Come, you who are Blessed by the Lord...! Genesis 24:31
Glorious Churches
Glory Bible Colleges
Marriage Registrar
91 9789092978
Kindly Subscribe
SCS Media